பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 07 புதன்கிழமை 20.01.2021 கதிர் 76


**இனி இது ரகசியம் அல்ல!**

நான் ஏற்கனவே இப்பகுதியில் குறிப்பிட்டமை போல ரஞ்சன் ராமநாயக்கவை சிறையில் அடைத்த விவகாரம் பெரும் உணர்வு பூர்வமான விடயமாகத் தென்னிலங்கையில் வெடித்துள்ளது.

நேற்று நாடாளுமன்றத்தில் இவ் விடயத்தை ஒட்டிக் பக்கம்02 »

## அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குங்கள்!

### வடக்கு சர்வ மதத் தலைவர்கள் ஜனாதிபதிக்குக் கையெழுத்து மகஜர்



இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குமாறு வடக்கில் உள்ள சர்வ மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி பக்கம் 11 »

## நேற்றும் 660 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில்நேற்றும்660 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின்எண்ணிக்கை 54 ஆயிரத்து 410 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 46 ஆயிரத்து 594 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், பக்கம் 11 »

## குருந்தூர் மலை அகழ்வாராய்ச்சி; தமிழர்களையும் இணையுங்கள்!

### அரசுக்கு சார்ள்ஸ் எம்.பி. கடிதம்



குருந்தூர் மலையில் தொல்லியல் திணைக்களத்தின் அகழ்வாராய்ச்சியில் துறைசார்ந்த தமிழர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனால் கடிதமொன்று பக்கம் 02 »

## எல்லை மீறி எகிறுகின்றது தொற்று

# வவுனியா மாவட்டதுக்குள் நுழையும் சகலருக்கும் கொரோனா சோதனை

## ஆளுநரிடம் அனுமதி கோருகிறார் அரச அதிபர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 20

வவுனியாவில் நேற்றும் 20 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையாகல் மாவட்டத்திற்குள் நுழையும் அனைவரையும் தொற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்த அனுமதிக்குமாறு மாகாண ஆளுநருக்கு மாவட்ட அரச அதிபர் அவசர கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றார். பக்கம் 02 »

## இனியும் இங்கு இணைந்து வாழ முடியுமா என்பதை அறிய வடக்கு, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள்!

### நாடாளுமன்றத்தில் சிறிதரன் எம்.பி. கோரிக்கை

தமிழர்கள் இனியும் இந்த நாட்டின் சிங்களவர்களுடன் இணைந்து வாழ முடியுமா என்பதை அறிந்துகொள்ள வடக்கு - கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நானே போரை வென்றேன், நானே பக்கம் 02 »

## மேலும் மூவர் மரணம் கொரோனாச் சாவு 273

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர்.

கேகாலை - அரநாயக்க பகுதியைச் சேர்ந்த 68 வயதான ஆண் ஒருவர் மாவனெல்ல வைத்தியசாலையிலிருந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - 06, வெள்ளவத்தையைச் சேர்ந்த 48 வயதான பெண் ஒருவர் கொழும்பு தனியார் பக்கம் 02 »

## ஜெனிவாவில் இம்முறை காத்திருக்கிறது ஆபத்து!

### ராஜபக்ஷ அரசு மீது ரணில் குற்றச்சாட்டு

ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீது நெருக்குவாரங்கள் அதிகரிக்கக்கூடும் என்று முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த நிலைமை ஏற்படுவதற்கு ராஜபக்ஷ அரசே முழுப் பொறுப்பு எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நாட்டைப்பாதுகாக்கும்வகையில் நல்லாட்சி அரசு வகுத்திருந்த கொள்கை பக்கம் 02 »

## மன்னாரில் முதலாவது கொரோனா சாவு பதிவு

### வடக்கில் இரண்டாவது மரணம்

மன்னாரில் முதலாவது கொரோனா மரணம் நேற்றுப் பதிவாகியுள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மன்னார் 'சைட் சிட்டி' பகுதியைச் சேர்ந்த 61வயதுடைய நபரே கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் கடந்த மாதம் 30ஆம் திகதி பக்கம் 02 »

## 4 தமிழக மீனவருடன் ட்ரோலரைக் காணோம் இலங்கைக் கடற்படை மோதி மூழ்கடித்ததா?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.20

இலங்கை கடற்பரப்பிற்குள் ஊடுருவிய இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகு ஒன்று இலங்கை கடற்படையினரின் கப்பலுடன் மோதிய நிலையில் அதிலிருந்த நான்கு மீனவர்களுடன் காணாமல் போயுள்ளதாக இந்தியத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை கடல் எல்லைப் பரப்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களிற்குச் சொந்தமான ஒரு ட்ரோலர் படகையும் அதில் பயணித்த நான்கு இந்திய மீனவர்களையும் காணவில்லை என இந்திய நீரியல் வளத் திணைக்களம் இந்தியக் பக்கம் 02 »

## சிறையிருந்த 40 இந்திய மீனவர்கள் விமானத்தில் நேற்று நாடு திரும்பினர்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.19

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 40 இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் விமானம் மூலம் பக்கம் 11 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காரசாரமாக நடந்த விவாதங்கள் அதன் வெளிப்பாடுதான்.

அந்த விவாதத்தில் பேசிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், நேர்மையான அரசியல்வாதியான ரஞ்சன் ராமநாயக்காக இப்படி தண்டிக்கப்பட்டு அவருக்கு அநீதி இழைக்கப்பட்டமைக்கு நாடாளுமன்றம் தான் காரணம் என்று குற்றம் சுமத்தினார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை இதுதான் என்ற வரையறை செய்யும் சட்டங்களை நாடாளுமன்றம் யாக்கத் தவறியமையால், தன்னிஷ்டப்படி உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் நிலை வந்திருக்கின்றது. 'காட்டுக் கழுதைக்கு சுதந்திரம் கிடைத்த நிலைமை போன்று' கட்டுமட்டில்லாமல் தீர்ப்பளிக்கும் நிலைமை வந்துள்ளது என்று அவர் விசனித்துள்ளார்.

காட்டுக்குள் இருக்கும் கழுதைக்கு வீட்டுக் கழுதை மாதிரி கட்டுப்பாடு கிடையாது. தன்னிஷ்டப்படி அது எதுவும் செய்யலாம், எங்கும், எப்போதும் அலையலாம். அப்படி உயர்நீதிமன்றம் கட்டுமட்டில்லாமல் ரஞ்சன் ராமநாயக்கா வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றது என்ற சாரப்பட சுமந்திரனின் பேச்சு அமைந்தது.

அதை வாசித்த போது எனக்கு எங்கோ இடிப்பது போல பட்டது. சுமந்திரன் போன்ற ஜனாதிபதி சட்டத்தரணி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த விதத்தை 'காட்டுக் கழுதைக்கு சுதந்திரம் கிடைத்த மாதிரி' என்று விமர்சிக்கலாமா என்று எனக்குத் தோன்றியது. எது, எப்படி என்றாலும் இந்த உரையை அவர் நாடாளுமன்றத்தில்தான் ஆற்றியிருக்கின்றார். அவருக்கு சிறப்புரிமைகள் உண்டு. நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரைக்காக உயர்நீதிமன்றம் அவரைத் தண்டிக்க முடியாது. அவர் எப்படியும் நாடாளுமன்றுக்குள் உயர்நீதிமன்றத்தைக் கூடக் காட்டமாக விமர்சிக்க முடியும். ஆனால் அதற்காக உயர்நீதிமன்ற தீர்ப்பை விமர்சிக்க அப்படி ஒரு வாசகத்தை ஜனாதிபதி சட்டத்தரணியான அவர் பயன்படுத்தலாமா என்ற கேள்வியை அவரிடமே கேட்டு வைத்தேன்.

*"பல பேருக்கு உங்கள் பாணியில் அந்த வாசகம் குறித்துக் கேட்கத் தோன்றவில்லை. இது எனது வாசகமே அல்ல. உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தன் தீர்ப்பில் பயன்படுத்திய வாசகம். தொழில் வழக்குகளில் உசிதமான – பொருத்தமான – நிவாரணங்களை வழங்கலாம் என்று எமது தொழில் நீதிமன்றுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்காக தொழில் நீதிமன்றுகள் கட்டுமட்டில்லாமல் தீர்ப்பளிக்கக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கு பிரபல நீதியரசர் ஒருவர் தன் தீர்ப்பில் இந்த வாசகத்தைப் பயன்படுத்தினார். அதையே – அதே போன்ற விவகாரத்தைச் சுட்டிக்காட்ட – நானும் பயன்படுத்தினேன்."* – என்றார் சுமந்திரன். ஏற்கக் கூடிய விளக்கமே.

சரி. ரஞ்சன் ராமநாயக்கா விடயத்தில் என்ன நடக்கும்? அவர் சட்டப்படி பதவி இழந்து விட்டார் என்று சட்டமா அதிபர் வியாக்கியானம் கூறிவிட்டார். ஆகவே அவர் பதவி இழப்பாரா என்ற கேள்வி எழுக்கின்றது.

நாடாளுமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்ட பிரேமலால் ஜயசேகராவுக்கு கொலை வழக்கு ஒன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அப்போதும் அவர் பதவியிழந்து விட்டார், நாடாளுமன்றுக்குச் செல்ல முடியாது என்றுதான் சட்டமா அதிபர் வியாக்கியானம் கொடுத்தார். அந்த வியாக்கியானம் இப்போது குப்பைக் கூடைக்குள். அது, ரஞ்சன் விவகாரத்திலும் கூட நடக்கலாம்.

பிரேம்லால் ஜயசேகரா விடயத்தில் அவர் நாடாளுமன்றுக்குச் செல்வதை சிறைச்சாலை ஆணையாளர் தடுக்க முடியாது என்றும், ஆனால் அவரை நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட அனுமதிப்பதா என்பதை சபாநாயகரே தீர்மானிக்க வேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், பிரேம்லால் ஜயசேகரா ஆளும் கட்சியைச் சேர்ந்தவர். சபாநாயகரும் அக்கட்சியினர்தான். ஆகவே அவர் முடிவை ஏற்க ஆளும் தரப்பினர் இணங்கியிருக்கலாம்.

ரஞ்சன் ராமநாயக்கா விடயத்தில் தமது முடிவை இரண்டு வாரத்தில் அறிவிப்பார் என சபாநாயகர் கூறியுள்ளார். ஆனால் அதனை ஏற்று, அதற்காகக் காத்திருக்க எதிரணித் தரப்பு தயாரில்லை.

முதலில், உயர்நீதிமன்றத்தின் இத் தீர்ப்புக் காரணமாக ரஞ்சன் ராமநாயக்காவின் எம்.பி. பதவி பறிபோய் விட்டது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகமும், தேர்தல் ஆணையமும் முடிவு செய்து நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் விதத்தில் அத்தரப்புகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 'ரிட்' மனு ஒன்றைத் தாக்கல் செய்து, அந்த இரு தரப்புகளுக்கும் எதிராக தடை உத்தரவு பெற விரைந்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிகின்றது.

அதே சமயம், ரஞ்சன் ராமநாயக்காவுக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீளாய்வு செய்யுமாறு கோரும் மனு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி ஒரு வழக்கைக் கொண்டு நடத்து வதற்குத் தாரளமான சட்டக் காரணங்கள் உண்டு என எதிரணி கூறுகின்றது.

அந்த மீளாய்வு மனு மீதான விசாரணை முடிந்து தீர்ப்பு வரும் வரை ரஞ்சன் ராமநாயக்கா நாடாளுமன்ற அமர்வுக்கு வருவதை தடுக்க முடியாது என்று உறுதியாக நம்புகின்றன எதிரணி சட்ட வட்டாரங்கள்.

சரி, என்ன நடக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போமே...!

– மின்னல் –

## மன்னாரில் முதலாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இம்மாதம் 16 ஆம் திகதி குறித்த நபருக்கு வைத்தியசாலையில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார் – என்றார்.

இவருடன் சேர்த்து வடக்கில் இதுவரை 2 பேர் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர். வவுனியா, பெரிய உலுக்குளம் பகுதியைச் சேர்ந்த 60 வயதான பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி கடந்த மாதம் 26ஆம் திகதி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவாவில் இம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
களை மீண்டும் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ அரசு உதாசீனம் செய்திருந்தது எனவும் அவர் சாடினார்.

அதனாலேயே இலங்கை இன்று சர்வதேச அரங்கில் தலைகுனிய வேண்டிய நிலைக்குச் சென்றுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜெனிவா விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பறிப்பதன் மூலமும், சர்வதேசத்தைப் பகைப்பதன் ஊடாகவும் பெரும்பான்மையின மக்களான சிங்களவர்களின் மனதை வெல்ல முடியும் என்று ராஜபக்ஷ அரசு தப்புக்கணக்குப் போட்டுள்ளது.

இந்தத் தப்புக்கணக்கு நாட்டைப் படுகுழியில்தான் தள்ளும் என்பதை அரச தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

சிங்கள மக்களின் முழு ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தோம் என்று மார்தட்டிய இந்த அரசு, மிகச் சொற்ப காலத்திலேயே அம்மக்களின் நம்பிக்கை இழந்து தவிக்கின்றது.

சிறுபான்மையின மக்களைப் பழிவாங்கும் இந்த அரசு, தற்போது தம்மை விமர்சிக்கும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

நீதி, நேர்மை, நியாயம் இல்லாத சர்வாதிகார ஆட்சியே இலங்கையில் தற்போது இடம்பெறுகின்றது.

இதற்கெல்லாம் நாம் விரைவில் முடிவு கட்டியே தீருவோம். ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் கைப்பற்றும். அதற்கான திட்டங்களை வகுக்க ஆரம்பித்துள்ளோம் – என்றார்.

## 4 தமிழக மீனவருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடலோர காவல் படையினருக்கு அறிவித்துள்ளனர்.

இதேநேரம் இலங்கை கடற்படையின் கப்பல் ஒன்றுடன் ஒரு விபத்து ஏற்பட்டதில் கடற்படையினரின் கப்பலிற்கு சேதம் ஏற்பட்டு திருத்தப் பணிக்காக கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கைக் கடற்படை தெரிவிக்கின்றது.

இவற்றின் அடிப்படையில் இலங்கை கடற்படையினரின் கப்பலில் இந்தியாவில் இருந்து மீன்பிடிக்குப் புறப்பட்டு காணாமல்போன படகே மோதியிருக்கலாம் என சந்தேகிக்கும் அதேநேரம் காணாமல்போன இந்திய படகில் இருந்த மீனவர்கள் நால்வரிற்கும் என்ன நடந்தது என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் காணாமல்போன ட்ரோலருடன் அருகில் இருந்த இரண்டு இந்திய ட்ரோலர்களில் இருந்த மீனவர்கள் நடந்த விடயங்களை இந்திய அதிகாரிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்திருக்கின்றனர் எனவும் தெரிகிறது.

கச்சதீவிற்கும் நெடுந்தீவிற்கும் இடைப்பட்ட பகுதியில் தமது ட்ரோலரை கடற்படையினர் மோதி நாசமாக்கியமையால் தங்களுக்கு உதவி புரியுமாறு அந்த ட்ரோலரில் இருந்தோர் ஏனைய ட்ரோலர்களில் இருந்தவர்களிடம் உதவி கோரியபோது, வலையை அறுத்துவிட்டுத் தப்பிக்குமாறு அவர்கள் பதிலளித்தனர் என்றும், ட்ரோலர் கடுமையாக சேதமடைந்து நீர் உட்புகுவதாக இரவு 8 மணிக்கு முன்பு இறுதியாக அவர்கள் பதில் தகவல் வழங்கினர் என்றும் இந்தியத் தரப்பில் தகவல் கூறப்படுகின்றது.

இதேநேரம் இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகு பயணித்த பகுதியில் இன்று பகல் முழுவதும் இந்தியக் கடலோரப் படையினர் தேடுதலில் ஈடுபட்ட போதும் காணாமற்போன படகோ, மீனவர்களோ கண்டு பிடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## இனியும் இங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிரபாகரனை கொன்று இழுத்து வந்தேன் என அண்மையில் கிழக்கில் ஓர் இடத்தில் கூறியுள்ள நிலையில், இந்த நாட்டின் மீது நடவடிக்கை எடுக்க வேறு என்ன சாட்சியங்கள் தேவை எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த நாட்டில் இனியும் தமிழர்கள், சிங்களவர்கள் இணைந்து வாழ முடியாது என்பதற்கு ஜனாதிபதியே சாட்சியாக உள்ளார். ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பேசினால் அவரைக் கொலை செய்வேன் எனக் கூறும் ஜனாதிபதியின் கீழ் சிங்களவர்களுக்கே இந்த நிலை என்றால் தமிழர்கள் இந்த நாட்டில் வாழ முடியுமா? இவ்வாறான ஜனாதிபதியின் கீழ் இந்த நாட்டில் நீதி கிடைக்குமா?

இந்த நாட்டில் இனியும் தமிழர்கள் வாழ முடியுமா என்பதை அறிந்துகொள்ள வடக்கு, கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்குத் தயாராக வேண்டும்.

இதற்காக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிடம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம் – என்றார்.

## மேலும் மூவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வைத்தியசாலையிலிருந்து நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 17ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 70 வயதான பெண் ஒருவர், நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையில் கடந்த 14ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 273 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 260 பேர் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குருந்தூர் மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த கடிதம் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குருந்தூர் மலையில் ஆதி சிவன் ஐயனார் கோவிலை காலா காலமாக மக்கள் வழிபட்டு வந்தனர். இந்தநிலையில், நேற்று ஆலயப் பகுதியில் தொல்லியல் சிதைவுகள் காணப்படுகின்றன என்று தெரிவித்து அகழ்வுப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்தநிலையிலேயே இன்று குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

உங்கள் தொல்பொருள் திணைக்களத்தின் ஆலோசனையில் 2021.01.18 அன்று அகழ்வுப் பணிகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தாங்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டீர்கள்.

அதன்போது இந்துக் கடவுளின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு இருந்தன. அத்துடன் அகழ்வுப்பணியில் யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் விரிவுரையாளர்களையோ, யாழ்.பிராந்திய தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் ஆராய்ச்சி உதியோகத்தர்களையோ உள்வாங்காமல் அகழ்வாராய்ச்சியை ஆரம்பித்தமையால் தமிழ் மக்களும், நானும் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம்.

ஆராய்ச்சிப்பணி வெளிப்படைத்தன்மையாக இருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். எனவே, யாழ். பல்கலைக்கழகத்தினரின் தொல்பொருள் பீடத்தினரையும், யாழ்.பிராந்திய தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையும் அகழ்வுப் பணியில் இணைத்துக் கொள்ளும்படி தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றுள்ளது.

இதேவேளை, இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சம்பந்தபட்ட இராஜாங்க அமைச்சருடனும், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருடனும் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள், சார்ள்ஸ் எம்.பி. அனுப்பிய கடிதம் கிடைத்துள்ளது எனவும், கடிதத்தில் உள்ள கோரிக்கையின்படி யாழ். பல்கலைக்கழகத்தினரின் தொல்பொருள் பீடத்தினரையும், யாழ்.பிராந்திய தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையும் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளனர்.

## வவுனியா மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வவுனியா மாவட்டத்தில் கொரோனா நோயாளர் எண்ணிக்கை நேற்றுடன் 222ஐத் தொட்டு விட்டது. மாவட்டத்தில் அதிக நோயாளர்கள் தொடர்ச்சியாக இனம் காணப்பட்டாலும் மாவட்டத்தில் கொரோனா பரவிலிற்கு காரணமாக மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை உள்ளிட்ட பிற மாவட்ட வர்த்தகர்களின் வருகையே இருந்துள்ளது.

இதன் அடிப்படையில் தெற்கில் இருந்து வவுனியாவிற்கு வருகை தரும் அனைவரையும் ஈரப்பெரியகுளம் பகுதியில் வைத்து பரிசோதனைக்கு உட்படுத்த அனுமதியையும் அவற்றிற்கான ஏற்பாட்டினையும் செய்து தருமாறு கோரியே மாவட்ட அரச அதிபர் கடிதம் நேற்று ஆளுநருக்கு அவசர கடிதம் எழுதியுள்ளார்.

இதன் மூலம் வவுனியா மாவட்டத்திற்குள் உள் நுழையும் அனைவரையும் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தி, உச்சப் பட்சமாக 20 நிமிடங்களில் பெறுபேற்றைப் பெற்று, பயணத்தைத் தொடர அனுமதிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. ரயிலில் வருபவர்கள் தொடர்பிலும் இதே பரிசோதனைக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

# சகலருக்கும் இராணுவப் பயற்சி வெறும் முன்மொழிவு மட்டுமே!

## என்கிறார் கெஹலிய




18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவ பயற்சியை வழங்குவது என்ற பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் அறிவிப்பு வெறும் முன் மொழிவு மட்டுமே என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், நாட்டின் அரசியல் பின்னணி, நிர்வாகம் மற்றும் அத்தகைய நடவடிக்கையின் அவசியம் ஆகியவற்றை மதிப்பீடு செய்த பின்னர் இது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை வளர்ந்த மற்றும் ஜனநாயக நாடுகளும் இத்தகைய கட்டாய இராணுவப் பயிற்சி முறையை வழங்குவதாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சுட்டிக்காட்டினார்.

இந்த விடயத்துடன் இராணுவ மயமாக்கல் என்ற வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாது என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டில் ஒழுக்கமான சமுதாயம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயற்சியை வழங்குவது தொடர்பாக நாடாளுமன்றில் திட்டம் ஒன்றை முன்வைக்கவுள்ளதாகப் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்றின் புதிய நோய் அறிகுறிகள்



கொரோனா தொற்றின் புதிய நோய் அறிகுறியாக 'கொவிட்டன்' என்ற அறிகுறி தற்போது உலகளவில் பரவி வருவதாக விசேட வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நோய் அறிகுறி மூலம் நபரொருவரின் நாக்கு தொற்றுக்கு உள்ளாவதுடன், நாக்கிற்கு வெளிப்புறத்தில் காயங்கள், சிவந்த கொப்புளங்கள், சிவந்த புள்ளிகள் போன்றவை உருவாகும் என குழந்தை மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

எவரேனும் இந்த அறிகுறிகளைக் கொண்டிருந்தால், அவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படுவதுடன், அவர்களுக்கு மிக விரைவில் பி.சி.ஆர் பரிசோதனை செய்ய பரிந்துரைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அறிகுறிகள் குழந்தைகளுக்குகூட தோன்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனவும் குழந்தை மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

# இரணைதீவு கடற்றொழிலாளருக்கு அரச அதிபரின் முக்கிய அறிவிப்பு!

இரணைதீவு கடற்றொழிலாளர்கள், அவர்களது தேசிய அடையாள அட்டைகளை காண்பித்து தொழில் செய்யமுடியும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி – இரணைதீவு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவடக்குமாகாணஆளுநர் தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ரூபவதி கேதீஸ்வரன் மேலும் கூறியுள்ளதாவது –

இரணைதீவு மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இரணைதீவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம்.

குறிப்பாக பாடசாலை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் கடல் போக்குவரத்து தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளோம்.

இதேவேளை, இரணைதீவு கடற்றொழிலாளர்கள், தங்களுடைய தேசிய அடையாள அட்டைகளைக் காண்பிக்கும் பட்சத்தில் அவர்கள் தொழில் செய்வதற்கான அனுமதி வழங்கப்படும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சி – இரணைதீவு மக்களின் பிரச்சினை குறித்து கலந்துரையாடல்!



கிளிநொச்சி – இரணைதீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விசேட கலந்துரையாடலொன்று வட.மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

இரணைதீவு பகுதியில் தொழில் செய்வதற்கான அனுமதி மற்றும் போக்குவரத்துக்கான அனுமதி வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித்து மக்களால் போராட்டமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

இந்நிலையிலேயே அந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இந்தப் பிரச்சினையை ஆராயும் கலந்துரையாடல் நேற்று காலை 11 மணியளவில் நடைபெற்றுள்ளது. இதில் கடற்படை அதிகாரிகள், பூநகரி பிரதேச செயலாளர், பிரதேச சபையினர், துறைமுக அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குமிழமுனை குருந்தூர்மலையில் முச்சூலம் பிடுங்கி எறியப்பட்டதா?

## நடந்தவற்றைத் தெளிவுபடுத்துகின்றார் சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சி

முல்லைத்தீவு மாவட்டம் குமிழமுனைக்கு அண்மித்தான குருந்தக்குன்றில் (குருந்தூர்மலையில்) அருள்மிகு ஆதி சிவ இலிங்கேச்சரர் திருக்கோயில் மூலவரான முச்சூலம் பிடுங்கி எறியப்பட்டதாக வந்த செய்திகள் தவறானவை.

- இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் 'முச்சூலத்தை எவரும் அகற்றவில்லை' என்ற தலைப்பில் இன்று விடுத்த அறிவிப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த மலையில் கோயில் பிரகாரத்தில் நாட்டப்படும் சூலம் அடிக்கடி காணாமலாக்கப்படுவதும் புதிதாக சூலம் நடப்படுவதும் வழமை. அப்பகுதியில் கட்டடங்கள் அமைக்கக் கூடாது என்ற நீதிமன்ற உத்தரவு காரணமாக சூலத்தை கொங்கிறீட் போட்டு நிலை நிறுத்த முடிவதில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. கடந்த முதலாம் திகதி புதிய சூலம் நடப்பட்டு பொங்கல் படைக்கப்பட்டது. அதன் பின்னரும் சில தினங்களில் வழமை போலவே அச்சூலம் காணாமல் போகச் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் மறவன்புலவு க.சச்சிதானந்தன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குன்றின் உச்சியில் உள்ள சைவ வழிபாட்டு இடம் எந்தவித மாற்றமும் இன்றி அப்படியே தொடர்கிறது. குருந்தக் குன்று திருக்கோயில் அறங்காவலர் இதனை என்னிடம் தெரிவித்தார்கள். மேலும் விவரம் பெற விரும்புவோர் திருக்கோயில் அறங்காவலர் திரு .சசிகுமார் அவருடன் தொடர்பு கொண்டு விவரங்களை அறியலாம்.

குருந்தன்குளம் அணைக்கட்டுக்கு அருகே மலையடிவாரத்தில் உடைந்த கட்டடம் இருந்தது. நான் நேரில் பார்த்திருக்கிறேன். அங்கு புதிதாக ஒரு கட்டடத்தைக் கட்ட முயன்றதால் நீதிமன்றத்தில் வழக்கு.

உடைந்த அந்தக் கட்டடத்தின் அருகே தொல்லியல் மாணவர்கள் ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்தனர். மேசை மீது புத்தர் சிலை ஒன்றை வைத்தனர். வணங்கினர். அந்த இடத்தில் நிலத்தைத் தோண்டவில்லை, நோண்டிப் பார்த்தனர்.

அமைச்சர் வந்திருந்தார். படைப் பிரிவினரும் வந்திருந்தார்கள். புத்தபிக்குகள் எவரும் அங்கு வரவில்லை.

படைப்பிரிவின் காப்பரண் நெடுங்காலமாகவே அங்கு உண்டு. படைவீரர் ஒருவரோ இருவரோ இருப்பார்கள். கடமைக்கு வராத நாள்களே கூடுதலானவை.

சைவக் கோயிலுக்குச் செல்வதற்குத் தடை ஏதுமில்லை. பொங்கலுக்குத் தடையில்லை. வழிபாட்டுக்கு தடையில்லை என அமைச்சரே அறங்காவலரிடம் கூறியுள்ளார்.

முழுமையான தகவல் அறியாமலே முச்சூலம் அகற்றியதாகத் தவறான செய்திகள் வெளியாகி சைவ உணர்வாளர்களின் மனம் புண்ணாகியதே.

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் குமிழமுனை வழியாகச் சைவ உணர்வாளர்கள் வழிபாடு பயணமாக குருந்தக் குன்று சென்று குருந்த மர நிழலில் அமர்ந்து இருக்கும் சிவபெருமானை வழிபட்டு அருள் ஆசிபெற்று வருவார்களாக. - என்றார்,

# காணி சுவீகரிப்புக்கு எதிராக வேலணையில் ஆர்ப்பாட்டம்!

## படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீளவும் மக்களிடமே வழங்குமாறும் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், காணி சுவீகரிப்புச் செயற்பாடுகளைநிறுத்தக்கோரியும் வேலணை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்று கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் பிரதேசத்தில் 11 பேருக்குச் சொந்தமான 5 ஏக்கர் காணியைக் கடற்படையின் தேவைக்காகச் சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தால் அளவீடு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காணி உரிமையாளர்களும் பிரதேச மக்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து நேற்று போராட்டமொன்றை முன்னெடுத்தனர். ஆயினும், காணி அளவீட்டுத் திணைக்கள அதிகாரிகள் காணி அளவிடுவதற்கு நேற்று அங்கு வருகை தரவில்லை .

ஆனபோதும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடமே வழங்கக் கோரி வேலணைப் பிரதேச செயலகத்துக்குப் பேரணியாகச் சென்ற மக்கள் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

இதைத்தொடர்ந்து அங்கு பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு பிரதேச செயலகத்துக்குள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உள்நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதை நிறுத்த வேண்டும் என வலியுறுத்திப் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இவ்வேளையில் அங்கிருந்தவர்களிடம் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர் சோதிநாதன், இந்தக் காணிகளைச் சுவீகரிக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டாலும் அதில் மக்களுக்கு விருப்பமின்மை அல்லது மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் அதனை நாம் தற்காலிகமாக இடைநிறுத்துகின்றோம். இது தொடர்பில் காணி அமைச்சுக்குத் தெரியப்படுத்தி அதன்பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்க முடியும் - என்றார்.

இதையடுத்துப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ‘ஒஸி’யில் தடுப்பூசி!

கொரோனாப் பெரும் தொற்றுத் தடுப்பு விவகாரத்தில் அரசு பொறுப்பின்றி – மெத்தனமாக – நடக்கின்றதோ என்ற அதிருப்தி நிலை அல்லது சந்தேக எண்ணம் நாட்டு மக்கள் மத்தியில் பரவலாக நிலவுகின்றது.

அதிரடியாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, நாட்டின் செயற்பாடுகள் வழமை நிலைக்குத் திரும்புவதற்கு குறிப்பிடத்தக்களவுக்கு விட்டுக் கொடுத்த அரசின் முடிவுக்குப் பின்னால் உள்ள சூட்சுமம் யாது என்பது யாருக்கும் தெரியாது. அதனை அரசு வெளிப்படுத்தவும் இல்லை.

இயலாத்தன்மையின் இறுதியில் அரசு மெல்லப் பிடியைத் தளர விட்டுவிட்டது என்பதுதான் பலரினதும் கணிப்பீடு. அதைத் தவறு என்றும் கூறமுடியாது.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு ஏனைய நாடுகள் பின்பற்றிய தந்திரோபாய அணுகுமுறையை இலங்கை பின்பற்றாவிட்டால் ஜனவரிக்குப் பின்னர் என்ன நடக்கும் என்பது தெரியாது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலர் வைத்தியர் ஹரித் அளுத்கே தெரிவித்துள்ளமை அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகவுள்ளது.

★ பி.சி.ஆர். சோதனைகளை அதிகரித்து, நோயாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

★ நகரங்களுக்கு இடையிலான போக்குவரத்தை மட்டுப்படுத்தி, தொற்றுப் பரவலைக் குறைக்க வேண்டும்.

★ மேல் மாகாணத்திலிருந்து வைரஸ் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும்தாராளமாக‘ஏற்றுமதி’யாகிக்கொண்டிருக்கின்றது.

★ நோயாளர்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதால் கொரோனாத் தொற்று சிகிச்சைக்கான வைத்தியசாலைகளில் இடவசதியில்லாத சூழல் ஏற்பட்டு வருகின்றது.

★ வைத்தியசாலைகள் தாங்க முடியாத அளவை நோயாளர் எண்ணிக்கை கடந்து விட்டால் நாட்டின் சுகாதார அமைப்பே முற்றாக வீழ்ச்சியடையும் பேராபத்து ஏற்படும்.

– இப்படி வைத்தியர் ஹரித் அளுத்கே எச்சரித்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

உலகின் பல நாடுகளும் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் தீவிர நடவடிக்கையிலிருந்து கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு மாறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அது விடயத்திலும் நமது நாடு காத்திரமாக நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

‘வெறுங்கை முழம் போடுவது மாதிரி’ அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இது விடயத்தில் வழமைபோல கயிறு விட்டிருக்கின்றார்.

ஒரு கோடி பத்து லட்சம் பேருக்கு – அதாவது நாட்டில் அரைவாசிப் பங்கினருக்கு – அடுத்த மாத இறுதிக்குள் தடுப்பூசி கிட்டும் என்று ‘அளந்து’ இருக்கின்றார் அவர்.

கடந்த ஓராண்டு காலமாக உலகம் முழுவதும் சில்லெடுக்கும் பிரச்சினையாக மாறியிருக்கின்றது கொரோனாத் தொற்று. ஒவ்வொரு நாட்டிலும் இதுதான் மிக முக்கிய பிரச்சினை. ஒவ்வொரு நாடும் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவது எப்படி, தடுப்பது எப்படி என்றுதான் தலையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கின்றது.

அத்தகைய பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கான மிக முக்கியமான அம்சம்தான் கொரோனாத் தடுப்பூசி.

அதனைப் பெறுவதற்கான நிதி ஒதுக்கீடு, பெற்ற தடுப்பூசியை களஞ்சியப்படுத்துவது, மக்களுக்கு உரிய முறையில் விநியோகிப்பது, அதைத் தொடர்ந்து தொடர் நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று பல அம்சங்கள் – முக்கிய விவகாரங்கள் – இதில் உண்டு.

அவற்றைச் செய்வதற்கான நிதி ஆதாரத்தை கண்டுபிடிப்பதில் இருந்து விடயங்களை ஒப்பேற்றுவதற்கான திட்டங்களைத் தயாரிப்பது வரை இமாலயப் பணிகள் உள்ளன.

குறைந்த பட்சம் இவ்வாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் தடுப்பூசி பெறுவதற்கான திட்டத்துக்கு அடையாள நிதி ஒதுக்கீடாவது செய்திருக்க வேண்டும்.

உலக நாடுகள் எல்லாம் தடுப்பூசி பெறுவது குறித்துத் தலையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கும் போது அந்த முயற்சிக்கான சொற்ப நிதி கூட நமது நாட்டின் வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அந்த விவகாரத்தில் – தடுப்பூசி பெறும் விடயத்தில் – இந்த ஆட்சிப் பீடத்தின் கவனிப்பு – சிரத்தை – இவ்வளவுதான்.

ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் சனத்தொகையில் இருபது வீதத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய எண்ணிக்கையில் கொரோனாத் தடுப்பூசியை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது. அத்தோடு பக்கத்து நாடான இந்தியாவும் தடுப்பூசி உற்பத்தி செய்யும் நாடு என்ற வகையில் இலங்கைக்குத் தடுப்பூசிகளை வழங்கி உதவத் தயார் என்று கூறியிருக்கின்றது.

‘வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைப்பது போன்று’ இலங்கைக்கு ‘ஒஸி’யில் கிட்டக் கூடிய தடுப்பூசிகளை மட்டும்தான் நாட்டு மக்களுக்கு கோட்டா அரசு வழங்கப் போகின்றது.

அதற்குள் நாட்டில் அரைவாசித் தொகையினருக்கு அடுத்த மாத இறுதிக்குள் தடுப்பூசி என்று பீற்றிக் கொள்ளும் பேச்சு வேறு…!

# குருந்தூர்மலை பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்பு: அரச தமிழ் எம்.பிக்களின் கருத்து நிலை என்ன?

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா கேள்வி



குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு எம் இன,மத உரிமைகள் சம்பந்தப்பட்ட உணர்வு பூர்வமான இந்த விவகாரத்தில், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட, அரசாங்க சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிலரில், எவரும் மௌனம் காக்கக் கூடாது, இல்லையேல் அந்த மௌனம் சம்மதமாகவே அர்த்தப்படும்.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலையில், பௌத்த விகாரை ஒன்றின் சிதைவுகளும் சிதிலங்களும் காணப்படுகின்றன என்ற கண்டுபிடிப்பு ஒன்றின் பேரில் அங்கிருந்த இந்து ஆலயத்தின் ஐயனார் சூலத்தை அகற்றி விட்டு, கௌதம புத்தரின் சிலை ஒன்றை நிறுவி, தொல்லியல் திணைக்களம் ஆரம்பித்திருக்கும் அகழ்வு ஆராய்ச்சி நடவடிக்கைகள், தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடமாக அங்கீகரிக்கப்பட்ட வட கீழ் மாகாணங்களில் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வரும் பௌத்த, சிங்கள நில ஆதிக்க விஸ்தரிப்பு நிகழ்ச்சி நிரலின் இன்னுமோர் அம்சம் என்பது தெட்டத் தெளிவானது.

இராஜாங்க அமைச்சர் ஒருவர் கொழும்பிலிருந்து வந்து பாதுகாப்பு முஸ்தீபுகளுக்கு மத்தியில் பௌத்த மத அனுட்டானங்களோடு ஆரவாரமாக ஆரம்பித்து வைத்துள்ள இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை, அரசாங்கத்தின் அதிகார அடாவடித்தனத்தின் அப்பட்டமான வெளிப்பாடு என்பதற்கு அப்பால், தமிழ் இனத்தின் மரபு வழித் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான நிலஇணைப்பின் தொடர்ச்சியை, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடுருவி உடைப்பதன் மூலம் சிதைக்க முனையும் பேரினவாத அரசியற் சதித் திட்டத்தின் சமீபத்திய அதிரடி என்பதும் அப்பட்டமானதாகும்.

தமிழர்களின் மரபு வழி மண்ணில், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வரும் பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக, தமிழ் இனத்தின் மத்தியில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் சமூக நடவடிக்கையாளர்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டிய கூட்டுப்பொறுப்பை கொண்டிருக்கின்றார்கள்.

ஒன்றுபட்டதும், ஒருங்கிணைக்கப்பட்டதும், தொடர்ச்சியானதுமான எதிர்ப்பு எமது மக்கள் மத்தியிலிருந்து எழ முடியுமானால், இந்த இனவெறித் திட்டத்தை நிச்சயம் தோற்கடிக்க முடியும்.

எம் இன மத உரிமைகள் சம்பத்தப்பட்ட உணர்வு பூர்வமான இந்த விவகாரத்தில், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட, அரசாங்க சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிலரில், எவரும் மௌனம் காக்கக் கூடாது, இல்லையேல் அந்த மௌனம் சம்மதமாகவே அர்த்தப்படும். – என்று உள்ளது

# மன்னார் வாக்காளர் இடாப்பிலிருந்து 7 ஆயிரத்து 727 வாக்காளர்கள் நீக்கம்

## மனித உரிமை ஆணைக்குழுவில் ரிஷாத் எம்.பி. நேற்று முறைப்பாடு



மன்னார் வாக்காளர் இடாப்பிலிருந்து 7 ஆயிரத்து 727 வாக்காளர்கள் நீக்கப்பட்டமை தொடர்பில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே, இந்த விடயம் குறித்து கடந்த 15ஆம் திகதி, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பி, வாக்காளர்களின் வாக்களிப்பு உரிமையைப் பெற்றுத்தருமாறு வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து, புத்தளம் மாவட்டத்தில் வாழ்ந்து வந்தவர்கள், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், கொத்தணி வாக்களிப்பு முறை ஊடாக, தமது மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட அதிகமானவர்களின் வாக்காளர் பதிவை, மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளரும், அதிகாரிகளும் சேர்ந்து திட்டமிட்டு, வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கியுள்ளனர். எனவே, அவர்களது வாக்குகளை மீள அந்தந்த கிராமங்களில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அகில மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று (18) மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவர் மேற்கொண்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இந்த வாக்காளர்கள் அனைவரும் மீள்குடியேற்றத்துக்காக சொந்த மண்ணுக்குச் சென்று, தமது பூர்வீக பிரதேசங்களில் தங்களுக்கான கொட்டில்களையோ அல்லது தற்காலிக இருப்பிடங்களை அமைத்த பிறகு, அங்கு கல்வி, சுகாதார, வர்த்தக நடவடிக்கைகளில் குறைபாடு இருந்ததினால் அல்லது இருப்பதற்கு ஒழுங்கான வீடுகள் இல்லாத காரணத்தினால், மீள்குடியேறிய இடங்களிலிருந்து தற்காலிகமாக மீண்டும் புத்தளத்துக்கு வந்திருக்கின்றனர்.

இவர்கள், மீள்குடியேறிய பிரதேசங்களில் உரிய வசதிகள் கிடைத்தவுடன் மீண்டும் அங்கு செல்வதற்கு விருப்பத்துடன் இருக்கின்றனர். அவ்வாறு ஆர்வத்துடன் இருக்கின்றவர்களின் வாக்குப் பதிவுகளை பலவந்தமாக நீக்கியமை மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறலாகும்.

இவ்வாறு வாக்காளர் பதிவு நீக்கப்பட்டவர்களுக்கு இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் தற்பொழுது வாக்குகள் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

நாட்டின் பிரஜை ஒருவருக்கு வெவ்வேறு இடங்களில் வீடுகள் இருப்பதற்காக, சொந்த மாவட்டத்திலுள்ள வாக்காளர் இடாப்பை மாற்ற முடியாது. கொழும்பில் வசிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மெதமுலானையில் வாக்களிக்கின்றார். முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அத்தனகல்ல மற்றும் பொலனறுவையிலேயே வாக்களிக்கின்றனர். அவர்களுக்கு இவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென்றால் ஏன் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, புத்தளத்தில் வாழும் சாதாரண மக்களுக்கு அந்த வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது?

எனவே, மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரால் வாக்களிப்பதற்கு தடுக்கப்பட்ட 7 ஆயிரத்து 727 வாக்காளர்களையும், அவர்களது சொந்த மாவட்ட வாக்காளர் இடாப்பில் மீளப் பதிவு செய்து, அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க வேண்டும்.

எனவே, இவ்வாறு தடுக்கப்பட்ட மன்னார் பிரதேச சபை (2,618), முசலி பிரதேச சபை (3,452), மாந்தை மேற்கு பிரதேச சபை (1,217), நானாட்டான் பிரதேச சபை (457), மன்னார் பிரதேச சபை (342) வாக்காளர்களையும் சொந்த மாவட்டத்தில் வாக்களிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம் – என்றுள்ளது.

# பின்தங்கிய பொருளாதார நாடுகள் பட்டியலில் இலங்கையும் வருமாம்!

## எதிர்வு கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் நிர்மாணித்த 5 பிரதான அபிவிருத்திகளை விற்றால் கூட அரச முறை கடன்களை செலுத்த முடியாது.

அரசாங்கத்தின் முற்போற்கான நிதி முகாமைத்துவத்தால் இலங்கை எதிர்காலத்தில் பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடுகள் பட்டியலில் இடம் பிடிக்க நேரிடும்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என அரசாங்கம் உளளூர் மட்டத்தில் குறிப்பிடலாம். ஆனால் சர்வதேசத்திடம் குறிப்பிட முடியாது.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டால் சர்வதேச மட்டத்தில் கிடைக்கப் பெறவிருந்த பல நிதி நிவாரணங்கள் இல்லாமல் போயுள்ளன.

ஒரு குடும்பத்தால் இந்த நாட்டை முன்னேற்ற முடியாது

- என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற 43 படையணி அமைப்பின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

எதிர்காலத்தில் நாடு எதிர்கொள்ள நேரிடும் நிதி நிலைவரம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு 2014 ஆம் ஆண்டு தெரிவித்துள்ளேன்.

தன்னால் நிர்மாணித்த அபிவிருத்திகளை பிற நாட்டவர்களுக்கு விற்றால் அரசமுறை கடன்களை செலுத்தி விடலாம் என பெருமையாக குறிப்பிட்டார். அவர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கிய 5 அபிவிருத்தி நிர்மாணிப்புக்களை விற்றால் கூட வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த முடியாத தன்மை காணப்படுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றால் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களையும், மத்தளை விமானநிலையத்தை விற்றால் 0.33 பில்லியன் டொலர்களையும், கொட்டாவ – அம்பாந்தோட்டை அதிவேக நெடுஞ்சாலையை விற்றால் 2.2 பில்லியன் டொலர்களையும், புத்தளம் மின்நிலையத்தை விற்றால் 1.2 பில்லியன் டொலர்களையும் , துறைமுக நகரத்தையும் அதனை அண்டிய பகுதியை விற்றால் 1.4 பில்லியன் டொலர்களையும் அத்துடன் பெருமளவிலான 5 அபிவிருத்திகள் ஊடாக 6.4 பில்லியன் டொலர்களையும் பெற முடியும் என பெருமைப்பட்டுக் கொண்டார்.

கடன்சுமையில் இருந்து மீள்வதற்கு தேசிய வளங்களை விற்பது முறையான தீர்மானமல்ல, ஏனைய நாடுகளை காட்டிலும் இலங்கை கடன்சுமைக்குள் சிக்குண்டுள்ளது.

ஈரான்,மொசாம்பிக் ஆகிய நாடுகளின் பொருளாதார மட்டத்தில் இலங்கை தற்போது உள்ளது. இந்நிலைமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள நாடுகளின் பட்டியலை அடைய நேரிடும்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என குறிப்பிடுகிறார்கள்.

கொவிட் தாக்கத்தால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த ஆசிய அபிவிருத்திவங்கி, சர்வதேசநாணய நிதியம் ஆகியவற்றின் ஊடாக 1,800 மில்லியன் நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. இலங்கை உட்பட 11 நாடுகளுக்கு சர்வதேச நிதி அமைப்புக்கள் நிதியுதவியை மேலதிகமாக வழங்கவில்லை.

பொருளாதார வீழ்ச்சிக்கு கொவிட் – 19 தாக்கம் ஒரு காரணியல்ல என சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஆகவே கட்டாயம் அரச முறை கடன்களை உரிய நேரத்தி;ல் செலுத்தியாக வேண்டும்.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மை, முரணான நிதிமுகாமைத்துவம், தான் தோன்றித்தனமான போக்கு ஆகியவற்றின் ஊடாக அரச முறைகள் செலுத்தல்,அரச வருவாய் அதிகரித்தல் ஆகியவற்றுக்கு தீர்வு காண முடியாது.

பழைய திட்டங்களின் ஊடாக இவ்விரு சவால்களையும் வெற்றிகொள்ள முடியாது. சிறந்த தலைமுறையினர், சர்வதேசத்தில் சாதிக்கும் இலங்கையர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்க வேண்டும். ஒரு குடும்பத்தால் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது. – என்றார்.

## துப்பாக்கி, வெடி மருந்துகளுடன் வவுனியாவில் இருவர் கைது!

வவுனியா, ஜன.20

வவுனியா – குஞ்சுக்குளத்தில் துப்பாக்கி, வெடி மருந்து மற்றும் பன்றி இறைச்சி கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மடு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியிலுள்ள பொலிஸ் சோதனைச்சாவடியில் வைத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த வாகனத்தை மறித்து சோதனை மேற்கொண்டபோது, நாட்டு துப்பாக்கி, வெடிமருந்து மற்றும் பன்றி இறைச்சியுடன் வாகனத்தில் பயணித்த 34 மற்றும் 52 வயதுடைய இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் நேற்று மன்னார் மாவட்ட நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## மட்டு. போதனா வைத்தியசாலை தாதியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில்!





மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்களால் ஒருமணி நேர பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது. அரச தாதியர் சங்கம், ஐக்கிய தாதியர் ஒன்றியம் என்பன இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உள்ள வைத்தியசாலை நிர்வாகக் கட்டடத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய தாதியர்கள் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு போதானா வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாதியர் ஒருவர் கொரோனா நோயாளியாக இனங்காணப்பட்ட நிலையில், அவர் சிகிச்சைக்காக காத்தான்குடி வைத்தியசாலையிலுள்ள தாதியர்களுக்கான சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இதன்போது அவரை அனுமதிப்பதற்கு காத்தான்குடி வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மறுப்பு தெரிவித்ததன் காரணமாக அவர் பெரியகல்லாறு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படுமிடத்து அவர்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலேயே ஓர் இடத்தை ஒதுக்கி சிகிச்சை வழங்குமாறு வலியுறுத்தியும் கொரோனா சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் தாதியர்களுக்கு விஷேட சலுகைகளை வழங்குமாறு வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்காவிட்டால் தொடர்ச்சியான பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய நிலையேற்படும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

## ஒரு கோடியே 10 லட்சம் இலங்கையருக்கு அடுத்த மாத இறுதிக்குள் தடுப்பூசி கிட்டும்!

### ஊடகப் பேச்சாளர் ஹெகலிய நம்பிக்கை

அடுத்த மாத இறுதிக்குள் ஒரு கோடியே 10 லட்சம் இலங்கையர்கள் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வார்கள் என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், 50 வீதமானோருக்கு தடுப்பூசியை இலவசமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளத் தற்போது நான்கு கொரோனா தடுப்பூசி உற்பத்தியாளர்களுடன் அரசாங்கம் பேச்சு நடத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



ஏற்கனவே இலங்கையின் சனத்தொகையில் 20 சதவீதமானவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசியை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசியின் ஏற்றுமதியின் போது இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இரு வாரங்களில் கொரோனா தடுப்பூசியை அண்டை நாடுகளுக்கு அனுப்பும் இந்தியா!

இராஜதந்திர நடவடிக்கையின் ஒரு பகுதியாக இரண்டு வாரங்களில் கொரோனா தடுப்பூசியை அண்டை நாடுகளுக்கு அனுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளது.

அந்தவகையில் முதலில் நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், மியன்மார், இலங்கை, ஆப்கானிஸ்தான், மாலைதீவுகள் மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நல்லெண்ண அடிப்படையில் இந்த நடவடிக்கையை இந்தியா எடுத்துள்ளது என்றும் அதன்பிறகு, சம்பந்தப்பட்ட நாடுகள் சீரம் நிறுவனம் அல்லது பாரத் பயோடெக் ஆகியவற்றிலிருந்து பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசியை கடந்த சனிக்கிழமை முதல் பாவனைக்கு எடுத்துக்கொள்ள இந்தியா அரசாங்கம் தீர்மானித்து முதல் நாளில் கிட்டத்தட்ட 1.9 லட்சம் பேர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆயிரம் ரூபாவின் பெறுமதி குறைந்தால் மட்டுமே தோட்டதொழிலாளருக்கு சம்பள உயர்வு கிட்டும்!

## மனோகணேசன் கிண்டல்



1000 ரூபா என்பது இன்னமும் மதிப்பிழந்து, 500 ரூபாய்க்கு சமனாகும் வரை அடிப்படை சம்பளம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்படாது என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

தோட்டத்தொழிலாளர் தொடர்பில், அவர்களது நாள் சம்பளம் பற்றிய கோஷம்தான் கடந்த பல்லாண்டுகளாக எப்போதும் உரக்கக் கேட்டது.

இன்றைய தோட்ட நிர்வாக அமைப்பு மாறாத வரையில் அல்லது 1000 ரூபா என்பது இன்னமும் மதிப்பிழந்து, 500 ரூபாய்க்கு சமனாகும் வரை அடிப்படை சம்பளம் 1000 ரூபா கூட்டொப்பந்த முறைமையின் கீழ் வழங்கப்படாது என நாம் கணித்திருந்தோம்.

ஆகவேதான், தோட்டத்தொழிலாளர்களுக்கு சொந்தமாகவோ, நீண்ட குத்தகைக்கோ காணி பிரித்தளிக்கபட்டு அவர்கள் சிறுதோட்ட உரிமையாளர் – கிராமவாசிகளாக மாற்றப்படுவதே நிரந்தர தீர்வு எனவும் கணித்திருந்தோம்.

தொழிலாளர்களுக்கு தோட்டக்காணி பிரித்து வழங்கப்பட வேண்டும் என்று பலர் பலகாலமாய் கூறி வந்தாலும் அதை அரசியல் கோஷமாக்கி 2019 ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்வாங்கி ஆவணப்படுத்தியது, தமிழ் முற்போக்கு கூட்டணியே.


இன்று இந்த கோம் அனைத்து தரப்புகளாலும் முன்வைக்கப்படுவது, முற்போக்கான வளர்ச்சியாகும்.

ஆனால், இந்த காணி பிரித்து அல்லது நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படுவது என்பதும் வெளிவாரி உற்பத்தி என்று கம்பனிகள் தொழிலாளருக்கு 'கண்ட்ராக்ட்' வழங்குவது என்பதும் இரு வேறு விடயங்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

தொழிலாளரை தொடர்ந்து சுரண்ட கம்பனிகள் விரிக்கும் சூழ்ச்சி வலை இதுவாகும்.– என அவர் மேலும் பதிவிட்டுள்ளார்.

# கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கப்படவே கூடாது!

## ஓமல்பே தேரர் அழுத்தம்



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். இல்லாவிடின் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் தொடரும் கடந்த அரசாங்கம் செயற்பட்ட வகையில் செயற்பட்டால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் புறக்கணிப்பார்கள் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

எம்பிலிபிடிய பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் பொருளாதாரத்தின் கேந்திர மையம் மாத்திரமல்ல தேசிய பாதுகாப்புக்கும் பிரதான தளமாகவும் உள்ளது. அரசாங்கம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகக் குறிப்பிட்டுக்கொண்டு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகிறது.

துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பிற நாட்டு நிறுவனங்களுக்கு விற்கவோ, குத்தகைக்கு வழங்கவோ மாட்டோம் என அரச தலைவர்கள் குறிப்பிடும் கருத்து முற்றிலும் பொய்யாகும். கடந்த அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு எவ்வாறு இரகசியமாக வழங்கியதோ அதன் தன்மையையேதற்போதைய அரசாங்கமும் தொடர்கிறது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கும் விடயம் தொடர்பாக ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் மாத்திரம் சாதகமாக கருத்துரைக்கிறார்கள்.

தொழிற்சங்கத்தினர், துறைசார் நிபுணர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். இந்த எதிர்ப்புக்களை அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பாக அரசாங்கம் மாற்றியமைக்கக் கூடாது. ஆகவே அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

பொதுஜன பெரமுன தேர்தல் மேடைகளில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன.

பொறுப்பற்ற வகையில் செயற்பட்டால் கடந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்ட விளைவே தற்போதைய அரசாங்கத்துக்கும் ஏற்படும். ஆகவே, கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். – என்றார்.

# ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் அதிகரிக்க அமைச்சரவை அனுமதி!

ஊழியர்களின் குறைந்த பட்ச சம்பளம் தொடர்பான சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெற்றது. இதன்போது, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தில் 25 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதிப்புற்ற நபர்களை தனிமைப்படுத்தலே தொற்றில் இருந்து நாம் விடுபட ஒரே வழி!

## சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த சமூகத்திலிருந்து பாதிக்கப்பட்ட நபர்களை தனிமைப்படுத்துவதை விரைவுபடுத்துவது அவசியம் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு மேற்கொள்வதே கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய நடவடிக்கைகள் என தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் நாளொன்றுக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தற்போது சுகாதார அதிகாரிகள் பி.சி.ஆர். சோதனைகளை போதுமான அளவு மேற்கொண்டு வருகின்றனர் என்றும் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொற்று மேலும் பரவாமல் பார்த்துக் கொள்ள சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# கொரோனா வைரஸைத் தடுக்க மக்கள் போதிய ஆதரவில்லை!

## கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வேதனை

கிழக்குமாகாணத்தில்கொரோனா வைரஸ்தொற்று பரவும்செயற்பாட்டைத் தடுக்க, மக்கள் போதிய ஆதரவை வழங்கவில்லை என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அழகையா லதாகரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

காத்தான்குடியிலுள்ள 18 கிராம சேவகர் பிரிவில் 10 பிரிவை தொடர்ச்சியாகத் தனிமைப்படுத்த வேண்டும் என நாங்கள் பரிந்துரை விடுத்துள்ளோம்.

இதனடிப்படையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிற்பாடு இந்த 10 கிராமசேவகர் பிரிவுகளில் எவ்வாறு தொடர்ச்சியாக தனிமைப்படுத்தலை அமுல்படுத்திக்கொண்டு செல்வது தொடர்பாக ஆராய்வதற்காக, இராணுவம் மற்றும் பொலிஸ் சுகாதார பிரிவினருடன் இந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்து, எந்த எந்த வீதி மற்றும் பகுதி என எல்லையை தீர்மானிக்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரம் சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு 10 பிரிவுகளை தனிமைப்படுத்துவது தொடர்பாக சிபாரிசுகளை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான உரிய பதில் ஓர் இரு தினங்களில் கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக மிகுதியான பகுதி விடுவிக்கப்படும். இதேவேளை இவ்விடயத்தில் மக்களுடைய ஒத்துழைப்பு போதியதாக இல்லை. ஆகவே, அவர்களும் முழுமையான ஆதரவை வழங்கினால் கிழக்கில் தொற்றை இல்லாமல் செய்யமுடியும். – என்றார்.

# பேலியகொட வணிக வளாகம் கட்டுமானம் மீண்டும் ஆரம்பம்!



இலங்கை அரச பொறியியலாளர்கள் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பேலியகொட வணிக வளாக சந்தை கட்டுமானப் பணிகள் துறை சார்ந்த அமைச்சர் மற்றும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் கடந்த திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகியது.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷவின் பூரண மேற்பார்வையின் கீழ் இந்த சந்தை வளாகத்தின் கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றன.

கிராமிய வீடமைப்பு பிராந்திய உறவுகள் நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவின் வழிப்படுத்தலுக்கு அமைய அந்த அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் இதன் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக சேவையாற்றிய காலப்பகுதியில் 14 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது இந்த வேலைத்திட்டத்தின் பணிகள் முழுமையாகக் கைவிடப்பட்டன.

இந்தச் சந்தை வளாகம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் நுகர்வோருக்கு கட்டுமானத்துறையின் அனைத்து மூலப்பொருள்கள், பொருள்கள் மற்றும் சேவைகளை ஒரே இடத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, சந்தை வளாகத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட பல கடைகளும் உத்தியோகபூர்வமாக கடை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. கொடுப்பனவுகள் தாமதிக்கப்பட்டிருந்த காரணத்தால் தேசிய இயந்திர நிறுவனத்தில் சேவையிலிருந்து விலகியிருந்த 50 ஊழியர்களுக்கு ரூபா 233 லட்சம் மதிப்பிலான உபகாரத்தொகை வழங்கப்பட்டது.

நேற்றைய 'தினமணி' நாளிதழில் வெளியான கட்டுரை இது. இன்றும்,நாளையும் இரு அங்கங்களாக அது இங்கு பிரசுரமகின்றது.

# இந்தியாவை ஏமாளியாக நினைக்கும் இலங்கை!

## புதுடில்லி அதை எப்போது உணரும்?

கே.எஸ். இராதாகிருஷ்ணன்
(வழக்கறிஞர், அரசியல் செயற்பாட்டாளர்)

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மூன்று நாள் பயணமாக இலங்கை சென்றார். இலங்கை வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவின் அழைப்பின் பேரில் அங்கு சென்று அவரிடம் பல வியங்களை விவாதித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு உடைப்பு, மாகாண கவுன்ஸில் ஒழிப்பு விடயங்கள் அங்கு இருந்தன.

அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை அதிபர் கோட்டாபயவையும் சந்தித்துப் பேசினார். தமிழர்கள் பிரச்சினையில் 13 ஆவது திருத்தம், மாகாண சபை முறையின் மாற்றம், தமிழர்களின் அரசியல் தீர்வு, ஜெனிவா மனித உரிமை ஆணையத்தில் தமிழினம் அழிப்பு தொடர்பான நீதிகேட்ட தீர்ப்பாணைகள், இந்தியாவின் கொரோனா தடுப்பூசி இலங்கைக்கு வழங்குவது குறித்தும் பேசப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

இதைத் தொடர்ந்து, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா இருவரும் கூட்டாக பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழ் சமுதாயத்தின் நீதி, சமத்துவம், அமைதி மற்றும் கௌரவத்திற்கு இந்திய அரசு துணை நிற்கும் என்று இலங்கைப் பயணத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

இப்படித்தான் இந்திரா காந்தி மறைவுக்குப் பின் மத்திய அரசில் இருப்பவர்கள் தொடர்ந்து 35 ஆண்டுகளாக சொல்லிக்கொண்டே வருகிறார்கள், ஈழத் தமிழர்களுக்கோ 40 ஆண்டுகளாக எந்தத் தீர்வும் எட்டப்படாமல் இருக்கிறது.

இலங்கை இந்தியாவிற்கு எவ்வளவு தான் விரோதமாக நடந்துகொண்டாலும் இலங்கை ஆட்சியாளர்களுக்கு இந்தியா ஆதரவளிப்பது தொடர்ந்து நடந்து வருகிறது, அது மேலும் இந்தியாவிற்கு சிக்கல்களை உருவாக்கும் என்பதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.


ஜெய்சங்கர் உறுதியளித்தவாறு இலங்கைக்கு தடுப்பூசி தருவது ஒரு மனிதாபிமான செயல்தான், இருப்பினும் இந்தியாவின் பங்களிப்புக்களையும் உதவிகளையும் பெற்று இலங்கையில் பலத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. அவை:-

1. யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் (தற்போது மூடப்படும் நிலை எனத் தகவல்).
2. காங்கேசன்துறையில் தாது மண் திட்டம்.
3. கொழும்பு - யாழ்ப்பாணம் ரயில் பாதையை சீர் அமைத்து தந்தது.
4. வவுனியாவில் புது பெரும் மருத்துவமனை.
5. சம்பூர் மின் உற்பத்தி திட்டம்.
6. இந்திய - இலங்கை சுற்றுலாத் திட்டத்தை விரிவு படுத்துவது.
7. சூரிய வெப்பத்தைக்கொண்டு இந்தியா உதவியால் மின் சக்தி ஒப்பந்தம் செய்வது.
8. இலங்கையில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் தொழில் பயிற்சியும் இந்தியா அளிப்பது.
9. கொழும்பு துறைமுகம் கிழக்கு முனையம் இந்திய - இலங்கை கூட்டு நடவடிக்கை.
10. எல்.என்.ஜி திரவ, இயற்கை எரிவாயு திட்டம்.
11. ஈழத் தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தல்.
12. நகர்புறத்தில் வீதிகளைச் சீர்படுத்தி தருதல்.
13. விவசாய வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி, இலங்கைத் தமிழர்களுக்கு விவசாயத்திற்கு டிராக்டர் வழங்குதல்.
14. ஈழத் தமிழ் பிள்ளைகளுக்கு பாடசாலை செல்ல சைக்கிள் வழங்கல்.
15. திருகோணமலை துறைமுகத் தளம் மற்றும் எண்ணெய் உற்பத்தி தொழில் ரீதியான ஒப்பந்தம்.
16. இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதில் உள்ள சிக்கல்கள். இந்தப் பயிற்சியாளருக்காக, இங்கிலாந்தில் சுமார் இரண்டு லட்சம் இராணுவ வீர்ரகள்தான் இருக்கிறார்கள், இலங்கையில் சுமார் 3 லட்சம் இராணுவ வீரர்கள் இருக்கிறார்கள். இது எதற்கு..? இந்தியர்களை அழிப்பதற்காகவா..? என்று இந்தியா உணர வேண்டும்.
17. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் 400 கோடி ரூபா மதிப்பிலான கட்டுமான பணிகள் ஒப்பந்தம்.
18. பெட்ரோல் எண்ணெய் கிணறுகள் குறித்தான ஒப்பந்தங்கள்.
19. இந்திய ரயில் மற்றும் பேருந்துகள் விற்பனை ஒப்பந்தங்கள்.

என சொல்லிக்கொண்டே போகலாம். இப்படி இலங்கைக்கு பலவகைகளில் இந்தியா உதவிக்கரம் நீட்டியுள்ளது. இவற்றில் பலவற்றை நிறைவேற்ற முடியாமல் இலங்கை அரசு சண்டித்தனமும் செய்கிறது.

இலங்கை இந்தியாவிடம் தொடர்ந்து உதவிகள் பெற்றுக்கொண்டு வருகிறது. முள்ளிவாய்க்கால் போர் முடிந்தவுடன் இலங்கைத் தமிழர் புனர்வாழ்வுக்கு இந்தியா நிதி வழங்கியும் அது சரியாக அங்குள்ள தமிழர்களுக்கு சேரவில்லை. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் கிடைத்த தகவலின்படி ராஜபக்ஷ தொகுதியின் பக்கத்தில் இலங்கையின் தென்முனையின் சிங்கள பகுதியில் காலியில் ரயில்வே சந்திப்பு ரயில் நிலையம் இந்தியா கொடுத்த பணத்தில் கட்டினார்கள். அதையும் மன்மோகன் சிங் காலத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா துவக்கி வைத்தார். இப்படியெல்லாம் பல குளறுபடிகள் இந்தியா கொடுத்த நிதியில் நடந்தன. மன்மோகன் சிங் அரசும் அதைக் கண்டுகொள்ளவில்லை.

சமீபத்தில் ஓராண்டுக்குள்ளே இந்தியாவிடமிருந்து இலங்கை இருமுறை நிதி உதவி பெற்றுள்ளது. ஆனால் இந்தியாவைக் காட்டி சீனாவிடமும் உதவிகளை பெறுகிறது. இந்தியாவிடம் ஒப்புக்கு உறவு வைத்துக்கொண்டு



இலங்கை தன்னுடைய முழுமையான ஆதரவை சீனாவிற்கு கொடுப்பதை நாம் எப்போது சிந்திப்பது?

இந்த நிலையில் அங்குள்ள தமிழர்களை இந்தியா அரவணைத்தால்தான் இலங்கை இந்தியாவைக் கண்டு அச்சப்படலாம். இந்தியா மீது இலங்கைக்கு பயமில்லாமல் போனதற்கு காரணம் ஈழத் தமிழர்களுக்கு எவ்வளவு தான் பிரச்னை செய்தாலும், இந்தியா நம்மைக் கண்டிக்காது, ஒப்புக்கு அதிகாரம் வழங்கு என்று சொல்லும், அவ்வளவுதான் என எடுத்துக்கொள்ளும் மனப்பாங்கில் இலங்கை அரசு இருக்கின்றது.

இதை இந்திய அரசு உணர வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு இந்திரா காந்தி அணுகுமுறையின் படி நடவடிக்கை எடுத்தால் இலங்கை ஓரளவு தமிழர்கள் பிரச்சினைகளுக்கு நியாயத்தை வழங்கும். இப்படித்தான் இந்திராகாந்தி அணுகுமுறையைப் பார்த்து அச்சம் கொண்டார் ஜெயவர்தனா.

பெரும்பாலானோர் 1987ல்தான் இந்திய இராணுவம் அமைதிப் படையாக இலங்கை வந்ததாக நினைக்கிறார்கள். ஆனால் 1971 இல் இந்திய இராணுவம் இலங்கை சென்றது என்பதை இவர்கள் அறியவில்லை. 1971 இல் இந்திரா காந்தியின் ஆட்சி காலத்தில் 2000 இந்திய இராணுவத்தினர் இலங்கை வந்தனர். ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்குவதாகக் கூறி அவர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் சுட்டதில் 6,000 சிங்கள இளைஞர்கள் இறந்தார்கள். அடுத்து 1987 இல் அமைதிப் படை என்று ஒரு லட்சத்து இருபதாயிரம் இந்திய இராணுவ வீரர்கள் இலங்கைக்கு வந்தார்கள். அமைதிப் படை வந்தபோது தெற்கு இலங்கைதான் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. தெற்கு இலங்கையில்தான் பிரதமர் ராஜீவ் காந்தி துப்பாக்கியால் தாக்கப்பட்டார். வந்தது அமைதிப் படை என்றால் தெற்கு இலங்கையில்தான் அவை நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒரு லட்சத்து இருபதாயிரம் இராணுவ வீரர்களில் ஒரு வீரர் கூட தெற்கு இலங்கையில் நிறுத்தப்படவில்லை. அதேவேளை எதிர்ப்பே தெரிவிக்காத வடகிழக்கு தமிழ் பகுதிகளில்தான் 10 தமிழருக்கு ஒரு இராணுவ வீரர் என்ற விகிதத்தில் நிறுத்தப்பட்டனர்.

அதுமட்டுமல்ல, 1965 இல் பாகிஸ்தானுடன் நடந்த போர் 22 நாள்களே நடைபெற்றது. 1971இல் வங்கதேசத்தை உருவாக்கிய போர் 14 நாள்கள் மட்டுமே நடைபெற்றது. ஆனால் 1987 இல் அமைதிப் படை ஈழத்தில் நடத்திய போர் இரண்டரை வருடங்கள் நடைபெற்றது. அதுவும் நாள் ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் வீதம் 5,400 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது.

இந்தியாவில் ஒடிசா மாநிலத்தில் வரலாறு காணாத வரட்சியில் விவசாயிகள் செத்துக்கொண்டிருந்த வேளை இலங்கையில் இந்திய அமைதிப் படை 5,400 கோடி ரூபா செலவு செய்து போர் நடத்தியது. இந்த இந்திய அமைதிப் படையினரால் 10,000க்கும் மேற்பட்ட அப்பாவி ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 800க்கும் அதிகமான பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டனர். பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான தமிழ் மக்களின் சொத்துகள் சேதமாக்கப்பட்டன.

இப்போது அங்குள்ள ஈழத் தமிழர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பதை இந்தியா உணரவேண்டும். அதிகாரப்பூர்வமான பயணங்கள், பேச்சுவார்த்தை ஒரு பக்கம் இருந்தாலும் கீழ்கண்டப் பிரச்சினையில் இந்திய அரசு கவனம் செலுத்தவேண்டும்,

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 2009 முள்ளிவாய்க்கால் போர் முடிந்து 10 ஆண்டுகள் மேல் ஆகியும், சிங்கள இராணுவம் தமிழர்களுடைய நிலங்களை அபகரித்து முகாம்கள் அமைத்து அங்குத் தமிழர்களை மிரட்டக்கூடிய வகையில் இருப்பதைஇராணுவத்தினர் உடனே திரும்ப வேண்டும்.

2. மேலே குறிப்பிட்ட இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்ட நிலங்கள், விவசாய காணி நிலங்கள், வீடுகளை திரும்பவும் தமிழர்களின் உரிமையாளரிடம் ஒப்படைக்கவேண்டும், இதுகுறித்தான வழக்குகள் நிலுவையில் உள்ளன.

3. முள்ளிவாய்க்கால் போரின் போது கைது செய்யப்பட்ட தமிழர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும்.

4. கடந்த 2009 போரின் போது காணாமல் போனவர்களை அறிந்து அதுகுறித்தான வெள்ளை அறிக்கையும், அவர் களைக் கண்டுபிடித்து அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

5. ஈழத்தில் தமிழ் விதவைகள் மறுவாழ்வுக்கும் சரியான நடவடிக்கைகள் இல்லை.

6. இந்தியாவில் இருக்கும் ஈழ அகதிகள் குறித்தும் தெளிவானப் பார்வை சிங்கள அரசுக்கு இல்லை. இந்தியாவிலுள்ள அகதிகளை ஈழத்திற்கு திருப்பி அனுப்பி அந்நாட்டு மக்களாக வாழ செயல் திட்டங்களையும் இந்தியா இலங்கையிடம் பேசவேண்டும். சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தம் போல ஈழத் தமிழ் அகதிகள் பிரச்சினைகள் ஆகிவிடக் கூடா.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகளுக்கு இங்கு தங்கிய கட்டணத்தை ரத்து செய்து, எந்தவித பயணக் கட்டணமும் இன்றி அவர்களை கப்பலில் அனுப்பி வைக்க வேண்டும். இலங்கை சென்றபின் இந்த அகதிகளின் வாழ்வாதாரத்தையும் பெற அனைத்து நடவடிக்கைகளும் செய்ய வேண்டும்.

7. மாகாண கவுன்ஸிலை ஒழிப்பதற்காக சிங்கள அரசு இறங்கியுள்ளது, அது மேலும் சிக்கலை உருவாக்கும். மாகாண அரசுக்கு உரிய அதிகாரம் இந்தியா மாநிலங்களுக்கு வழங்கியது போல வழங்கப்பட்டால்தான் அங்குள்ளத் தமிழர்கள் அமைதியாகவும் சம அந்தஸ்துடனும் வாழ முடியும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண முதல்வர்களோ, மாகாண சபைக்கோ உறுதியளிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

8. ஜெனிவா, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் நிலுவையில் உள்ள ஈழத் தமிழர்கள் இன அழிப்பு குறித்தான நியாயம் தமிழர்களுக்கு தீர்ப்பாணை மூலம் கிடைக்க வேண்டும்.

9. தமிழர்களுக்கு அரசியல் தீர்வுக்கு பொது வாக்கெடுப்பு அயலக பொறிமுறை கண்காணிப்பில் நடத்தவேண்டும்.

10. இன அழிப்புக்கான நியாயம் கிடைக்க சர்வதேச சுதந்திரமான, நம்பிக்கையான, புலனாய்வும், நீதி விசாரணையும் நடத்தவேண்டும்.

11. வடக்கு, கிழக்கு மாநிலம் சைவ மதத்தின் கேந்திரப் பகுதிகளாகும். அங்குள்ளத் தமிழர்கள் வணங்கும் இந்து மத கோவில்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. தமிழர் கலாசாரத்தைப் பாதுகாத்து முறைப்படுத்த வேண்டும். இப்படி அழிக்கப்படும் இந்து மத கோவில்கள் என நீண்ட பட்டியலே உள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# அனைவருக்கும் இராணுவப் பயிற்சிகள் அரசின் மோசமான பாசிச வெளிப்பாடு!

## எதிர்க்கட்சி கடும் சாடல்



கொழும்பு. ஜன.20

ஜனநாயகத்தின் பிரதான விடயமாகக் காணப்படும் பேச்சு சுதந்திரத்தை முடக்க முயற்சிக்கும் அரசாங்கம், எதிர்வரும் காலங்களில்நாட்டில் பாசிசவாத இராணுவ ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்கான முன்னேற்பாடாக 18 வயதுக்கும் மேற்பட்டோருக்கு இராணுவ பயிற்சி வழங்கத் தீர்மானித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

அனைத்து வழிகளிலும் தோல்வியடைந்துள்ள அரசாங்கம் தற்போது பேச்சு சுதந்திரத்தையும் ஒழிக்க முயற்சிக்கிறது. ஜனநாயகரீதியாக முன்னோக்கிப்பயணிக்க வேண்டிய நாட்டில் பேச்சு சுதந்திரத்தை முடக்க முயற்சிக்க வேண்டாம் என்று ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறிருக்கையில் 18 வயதிற்கும் அதிகமானோருக்கு இராணுவ பயிற்சியளிக்கத் தயாராகவுள்ளதாக பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சர் கூறியிருக்கிறார்.

இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் நாட்டில் பாசிசவாத இராணுவ ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது. சிவில் சமூகத்தில் இராணுவ பயிற்சியை வழங்க முயற்சிப்பதன் மூலம் அவர்களின் மனோபலத்தை மாற்ற முயற்சிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று மக்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களது பிரச்சினைகளை அறிந்து தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் என்று தேர்தல் காலத்தில் சஜித் பிரேமதாஸ கூறினார். இதனை ஆளுந்தரப்பு கடுமையாக விமர்சித்தது. ஆனால் தற்போது அந்த யோசனையை ஜனாதிபதி செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இதே போன்று பாடசாலை மாணவிகளுக்கான சுகாதார பாதுகாப்பு துவாய் தொடர்பான யோசனை முதன்முறையாக எதிர்க்கட்சி தலைவரால் முன்வைக்கப்பட்டது.

அப்போது அதனை விமர்சித்தவர்கள் இப்போது அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். இது மகிழ்ச்சிக்குரியது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி இல்லை என்று நிதி அமைச்சர் கூறினாலும் கடனை மீளச் செலுத்த வேறு வழியில்லை என்பதால் வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவேற்பதே என்று அமைச்சரொருவர் கூறுகிறார்.

எவ்வாறிருப்பினும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக முயற்சி செய்யாமல் கடனை செலுத்துவதற்காக தேசிய சொத்துக்களை அந்நியர்களுக்கு விற்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

நல்லாட்சி அரசாங்கம் செய்ததை செய்வதற்காகவா இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது? நல்லாட்சி அரசாங்கத்தின் போது வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கிய அபிவிருத்திகளையும் மீட்பதாகக் கூறியே அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் தற்போது தேசிய சொத்துக்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறது. - என்றார்.

# தனிமைப்படுத்தல் விதி மீறிய 126 நிறுவனங்களுக்கு வழக்கு!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 126 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) 1004 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களில் 848 நிறுவனங்கள் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேல் மாகாணத்தில் 18 ஆயிரத்து 149 அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். சோதனை

தனிமைப்படுத்தல் விதிமுறையின் கீழ் மேல் மாகாணத்தில் 18 ஆயிரத்து 149 நபர்கள் மீது விரைவான அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தள்ளனர்.

அவர்களில் 203 பேர் கொவிட் - 19 பாதிக்கப்பட்ட நபர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு மாகாணத்திலிருந்து வெளியேறும் 10 ஆயிரத்து 926 நபர்கள் மீது 11 வெளியேறும் இடங்களில் விரைவான அன்டிஜன் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 103 பேர் கொவிட் - 19 நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேற்கு மாகாணத்தில் முகக்கவசம் அணியத் தவறிய 2 ஆயிரத்து 807 நபர்கள் மீது விரைவான அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 50 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை நிரூபனமாகியது.

மீன் கடைகளில் 661 நபர்கள் மீது விரைவான அன்டிஜன் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர், அவர்களில் மூன்று பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அதே நேரத்தில் கண்காட்சிகள் மற்றும் நடைபாதை கடைகளில் 1,146 நபர்கள் மீதும் விரைவான அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையுடன் அவற்றுள் மூவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தவிர கொழும்பு கோட்டை மற்றும் காலி முகத்திடலில் 385 நபர்கள் மீதும் விரைவான அன்டிஜன் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களில் 18 பேர் வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்துள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறினார்.



# வலம்புரி சங்குடன் ஆறு பேர் கைது!

வலம்புரி சங்கொன்றை 20 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டுக்காக அம்பலாங்கொடை பகுதியில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையின்போதே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது சந்தேக நபர்கள் பயன்படுத்திய சொகுசு ஜீப்பொன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சீதுவ பகுதியில் பயன்பாட்டுக்கு உதவாத 29 ஆயிரம் கிலோ கிராம் தேயிலை தூளுடன் ஏழு பேரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# இந்தியாவை ஏமாளியாக ...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

12. இந்து மகா சமுத்திரம் அமைதி மண்டலமாகவும் இந்தியாவின் ஆளுமைக்கு உட்பட்டதாகவும் இருக்கவேண்டும். ஆனால் அங்கே இன்றைக்கு உள்ள சூழல் என்னவென்றால் சீனா இலங்கையை தன் கையில் வைத்துக்கொண்டு இந்தியப் பெருங்கடலில் தன் வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, நாடுகளுக்கு வணிகம் செய்ய இந்து மகா சமுத்திரத்தை ஆக்கிரமித்துள்ளது. அது மட்டுமல்ல ஹம்பந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்துள்ளது. சீனாவின் போர்கப்பல்களுக்கு இந்து மகா கடலில் என்ன வேலை, கடல் மார்க்கமாக எளிவாயு பாதைகளை அமைக்கவும், எண்ணெய் ஆராய்ச்சி செய்யவும் திருகோணமலை, கச்சத் தீவுகள் வரை சீனாவின் ஆதிக்கம் எட்டிவிட்டது. அதுமட்டுமல்லாமல் திரும்பவும் டிகோகர்சியா அமெரிக்க ஏவுதளத்தை அமைத்துவிட்டது. ஜப்பான் இலங்கையின் ஆதரவோடு இந்தியப் பெருங்கடல் எண்ணெய் வள ஆய்வை நடத்துகிறது. பிரான்ஸும் இந்தியப் பெருங்கடலில் ஆதிக்கம் செலுத்த முனைந்துள்ளது.

இப்படிப்பட்ட பதற்றமான சூழ்நிலையில் அமைதி மண்டலமாக இருந்த இந்தியப் பெருங்கடலை மாற்றியதற்கு காரணமாக இருந்தது இலங்கைதான். இது எதிர்காலத்தில் பாதுகாப்பிற்கான சிக்கல்களை உருவாக்கும் என்பதை மத்திய அரசு உணரவேண்டும்.

(மிகுதி நாளை)

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## மறைநீர்

மறைநீர் என்பது ஒரு வகை பொருளாதாரம் ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியையும் பணத்தைக்கொண்டு மதிப்பிடுவதைப் போல நீர் வளத்தை கொண்டு மதிப்பிடும் பொருளாதாரம் தான் மறைநீர், ஒரு மெட்ரிக் தொன் கோதுமை 1,600 கியூபிக் மீற்றர் தண்ணீருக்கு சமம் என்கிறது மறைநீர் தத்துவம். எப்படி?

கோதுமையை விளைவிக்க நீர் தேவை. ஆனால், கோதுமை விளைந்தவுடன் அந்த நீர் இருக்காது. எங்கே போனது அது? கோதுமைக்காக செலவிடப்பட்ட நீர் கோதுமைக்குள்தானே மறைந்திருக்க வேண்டும். இதுவே மறைநீர்.

1. நீரின் தேவையையும் பொருளின் தேவையையும் துல்லியமாக ஆய்வுசெய்து அதற்கு ஏற்ப உற்பத்தி.
2. ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுக்க வேண்டும்.
3. சீனா, இஸ்ரேல் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் அப்படித்தான் செய்கின்றன.
4. சீனாவின் பிரதான உணவு பன்றி இறைச்சி. ஒரு கிலோ பன்றி இறைச்சி உற்பத்திக்கான மறை நீர் தேவை 5,988 லீற்றர். அதனால், சீனாவில் பன்றி உற்பத்திக்கு கெடுபிடி அதிகம். ஆனால், தாராளமாக இறக்குமதி செய்துகொள்ளலாம்.
5. ஒரு கிலோ ஆரஞ்சுக்கான மறை நீர் தேவை 560 லீற்றர். சொட்டு நீர் பாசனத்தில் கோலோச்சும் இஸ்ரேலில் ஆரஞ்சு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு கெடுபிடிகள் அதிகம்.
6. இவ்விரு நாடுகளும் ஒவ்வொரு பொருளுக்குமான மறை நீர் தேவையைத் துல்லியமாகக் கணக்கிட்டு அதன்படி ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுத்துள்ளன.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# மீண்டும் இலவு காத்த கிளிகள்

சட்டத்தரணி செ.ரவீந்திரன் – ஆஸ்திரேலியா



> அன்றிலிருந்து தேவையாக இருந்தவை ஆதாரங்களல்ல. பொறுப்பு கூறுவதற்கான பொறிமுறைகளே. ஆனால், அதை தவிர்ப்பதற்கான தந்திரோபாயங்களை சிங்கள அரசுகள் மாறி மாறி ஒத்துழைத்துச் செய்தன. மஹிந்தா உள்நாட்டு பொறிமுறைக்கு வடிவமைக்க ஆணைக்குழுவை ஏற்படுத்த அவர்களும் குற்றங்கள், மீறல்கள் நடந்தன என்றும் புலிகளின் மீறல்களையும் எடுத்துக் காட்டி நடந்தவை எதிர்வினையானவை என்று கோடி காட்டினார்கள். ஆனால் முக்கியமானது மனித உரிமை மீறல்கள் நடந்தன என்ற தீர்மானங்களும் ஆதாரங்களும்தான்.

தனிப்பட்ட கட்சி அரசியல் வட்டாரத்திலிருந்தும், அப்படியான அபிலாஷைகளிலிருந்தும் விலகியிருந்து, மனித உரிமை விடயங்களில் முக்கியமாக தமிழர் சார்பில் ஈடுபட்டவனாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் 47உறுப்பு நாடுகளின் தூதுவர்களுக்கு 46ஆவது கூட்டத் தொடரில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு கோரி சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தை பார்த்தேன். மூன்று முக்கிய கட்சிகளும் தங்கள் தங்கள் அரசியல் நலன்களுக்காக, தாங்கள் இதுவரை கூறிவந்தவை எப்படியோ உறுப்பு நாடுகளின் தூதுவர்களுக்கும் சென்று சேரவேண்டும் என்ற அவாவில் அது தயாரிக்கப்பட்டதாகவே படுகிறது.

பத்திரிகை செய்திகளை படிக்கும் போது, பல நல்ல எண்ணங்கள் கொண்டவர்கள் இவர்களின் முன்னும் பின்னும் திரிந்து கடைசி நேரத்தில் அவர்கள் கையெழுத்திட ஏற்பாடுகள் செய்தார்கள் என்று தெரிகிறது. பல்வேறு அங்கலாய்ப்புகளில் ஏதோ முறுகிக் கொண்டிருந்த மாமன், சிறியதகப்பன் போன்றோரை அங்கும், இங்கும் சமாதானப்படுத்தி தாலி கட்டுவதற்கு முன்னாலாவது, கல்யாணத்துக்குக் கூட்டி வந்த வழமையான யாழ்ப்பாணத்து கதைதான். அதிலும் வந்தவர்கள், கல்யாணவீட்டு சாப்பாட்டில் கை நனைப்பார்களா, மாமன் பகுதியில் சிலருக்கு தண்ணீர் செம்பு கொடுக்கவில்லை என்ற பிரச்சினை – இவையெல்லாம் வேதனையா, வெட்கக் கேடா என்று தெரியவில்லை.

இன்னுமொரு வேதனையென்றால், இவர்கள் புத்திஜீவிகள், அதுவும் பிரசித்த சட்டத்தரணிகள். இவர்கலெல்லோருக்கும் இது எந்த களத்திற்கு போகிறது, அந்த களத்தின் அதிகார வரம்பு என்ன என்பது தெரியும்.

அங்கு தற்சமயம் அரசியல் கோரிக்கைகளல்ல, மனித உரிமை மீறல்களே முக்கியம். அதன் அடிப்படையில் கடிதம் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மனித உரிமைப் பேரவையின் அதிகார வரம்புக்கமைய, நன்கு தயாரிக்கப்பட்ட ஒரு வழக்கு நீதிமன்றில் 50வீத வெற்றியடையும் வாய்ப்புடன் தொடங்கும் என்பதை அனுபவ ரீதியாக உணரலாம். அவர்களுக்கு அது அத்துப்படி. ஆனால், இங்கோ, இருந்தா உட்பூசல்களை நீக்கி, முக்கியமாக ஸ்ரீலங்காவிற்கு மேலும் காலம் கொடுப்பதா இல்லையா என்ற வாதத்தில் இல்லை என்ற நிலைப்பாடு கொள்ள வேண்டும் என்ற சாராம்சத்தை தர வேண்டுமென்று எழுந்த ஆர்வத்தில் ஆப்பிழுத்த குரங்குகளின் நிலையில் அதனைச் சொல்லியிருக்கிறார்கள்.



இறுதிக் கட்டப் போரில் மனித உரிமைகள் மீறப்பட்டன என்ற குற்றச்சாட்டுப் பின்னணியில் ஸ்ரீலங்காவிற்கு மே 23, 2009 இல் வந்த ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற எந்த பொறுப்பு கூறல் பொறிமுறையும் ஏற்படுத்தப்படவில்லை என்பதால், அந்த பின்புலத்தில், 2009 இன் இறுதிக் கட்ட போரில் எழுந்த மனித உரிமைகளின் பொறுப்பு கூறல் விடயங்களை ஆராய மூவர் அடங்கிய நிபுணர் குழுவை செயலாளர் நாயகம் 22 ஜூன் 2010 நியமித்தார். அந்த குழு மார்ச் 2011 மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களும் நடந்துள்ளன, அவற்றை விசாரிப்பதற்காக நம்பிக்கையான பொறிமுறைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று பரிந்துரைத்தது.

அந்த அறிக்கையை செயலாளர் நாயகம் செப்ரெம்பர் 2011இல் மனித உரிமை பேரவை தலைவரிடத்தும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடத்தும் பாரப்படுத்தினார்.

தமிழ் மக்களுக்காக மட்டுமல்லாமல் அங்கத்துவ நாடான ஸ்ரீலங்கா மனித உரிமை மீறல்களிலும் போர்க் குற்றங்களிலும் ஈடுபட்டதை விசாரிக்கும் முகமாகவே இவை பாரப்படுத்தப்பட்டன.

அதனை நேரடியாக, ஐ.நா.மூலம் பாரப்படுத்தும் இறைமை எமக்கு இல்லை. ஆகவே நாங்கள் விரும்பியோ, விரும்பாமலோ கால அவகாசம் தரக்கூடாது, எங்களுக்கு மனித உரிமை பேரவை எதையும் ஆணித்தரமாக செய்யும் என்பதில் நம்பிக்கை குறைந்து விட்டது, ஆகவே இம்முறை இறுதி தீர்மானமாக இருக்க வேண்டும் என்று எழுதுவது பேரவையின் அங்கத்துவ நாடுகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாது.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளின் விரக்தியின் வெளிப்பாடாக அந்த எழுத்துக் கருதப்படலாம். அவ்வளவே.

அன்றிலிருந்து தேவையாக இருந்தவை ஆதாரங்களல்ல. பொறுப்பு கூறுவதற்கான பொறிமுறைகளே.

ஆனால், அதை தவிர்ப்பதற்கான தந்திரோபாயங்களை சிங்கள அரசுகள் மாறி மாறி ஒத்துழைத்து செய்தன. மஹிந்தா உள்நாட்டு பொறிமுறைக்கு வடிவமைக்க ஆணைக்குழுவை ஏற்படுத்த அவர்களும் குற்றங்கள், மீறல்கள் நடந்தன என்றும் புலிகளின் மீறல்களையும் எடுத்துக் காட்டி நடந்தவை எதிர்வினையானவை என்று கோடி காட்டினார்கள்.

ஆனால் முக்கியமானது மனித உரிமை மீறல்கள் நடந்தன என்ற தீர்மானங்களும்ஆதாரங்களும்தான்.

அந்த விசாரணையின் அடிப்படையிலும் பொறுப்பு கூறும் பொறிமுறைகள் அமையவில்லை. அதை தொடர்ந்து நல்லிணக்க அரசு காலத்தில் இணை அனுசரணை அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. ஆனால், எதுவும் நடக்கவில்லை. இழுத்தடிக்கப்பட்டது.

இந்த காலங்களில் தங்கள் அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கான பயணங்கள் ஜெனிவாவுக்கு கட்சிப் பிரமுகர்களால் மேற்கொள்ளப்பட்டன. தமது பயணங்களால் ஜெனிவாவில் தீர்மானங்கள் தீவிரமாகின்றன என்ற கருத்துக்கள் மக்களிடையே உலாவ விடப்பட்டன.

அது தவிர, முக்கியமாக, தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளும், மனித உரிமைமீறல்களும் இன அழிப்பு என்ற பிரேரணையை நிறைவேற்றி இதனை ஐ.நா. விசாரிக்க வேண்டும் என்று கோரப்பட்டது. அந்த கோரிக்கை ஐ.நாவிலே மனித உரிமை சபைக்கு பாரப்படுத்தப்படவில்லை. இவற்றின் தார்ப்பரியமோ, அதிகார வரம்பை அறிந்தும் அறியாமலோ இனப் பிரச்சினையால் ஏற்பட்ட ஆயுதப் போரட்டத்தின்போது இழைக்கப்பட்டது. இனப் படுகொலை என்ற முறையில் நோக்கப்பட வேண்டும் என்ற சாரப்பட கடிதம் கோருகிறது.

நாங்கள் எங்களுக்கு நடப்பது இனப்படுகொலை என்று கருதி, உணர்ச்சி வசப்பட்டாலும், அந்த அடிப்படையில் அரசியல் நடத்தினாலும், பொதுவாக ஐ.நா. உறுப்பு நாடுகளிடமோ அன்றில் மனித உரிமை பேரவையின் 47 அங்கத்துவ நாடுகளில் பெரும்பான்மையிடமோ அந்த அபிப்பிராயம் பெருமளவில் இல்லை.

இடையிடை இந்திராகாந்தி மலேசியாவின் மகாத்தீர் போன்ற சில தலைவர்கள் கருத்துக்கள் கூறியிருக்கிறார்கள். ஏன் 1986 மனித உரிமை சபையில் ஆற்றிய உரையில் இந்தியப் பிரதிநிதி பண்ருட்டி இராமச்சந்திரன் அதனை ஆணித்தரமாக அறிவித்தார். அந்த அடிப்படையிலேயே இந்தியா தமிழ் மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் என்றார். இது ஜே.ஆர். யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை நிறுத்திய காலம். ஆனால், நாங்கள் அதனை (இனவழிப்பு என்பதை) தொடர்ந்தும் ஆதாரங்களால் நிறுவவில்லை. இவை நாங்கள் எடுத்த அரசியல் போக்கினால் நிகழ்ந்தவை.

ஆக அங்கத்துவ நாடுகள், இறுதியுத்தக் காலத்தில் கிளர்ச்சியால் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் கால குற்றங்கள் என்றே பார்க்கின்றன.

நாங்கள் பாயை இனப்படுகொலை என வேயலாம். (இணையலாம்?). ஆனால், அது விலைபோகுமா அல்லது குட்டையை குழப்புமா என்று சிந்திக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா, தனது உச்ச நிலைப்பாட்டில் தாங்கள் ஒரு பயங்கரவாத இயக்கத்தை நாட்டின் இறைமைக்காவும், பிராந்திய பாதுகாப்புக்காவும் அடக்கவேண்டியிருந்தது, அதில் அந்த இயக்கத்தின் பயங்கரவாத மூச்சினால், தீவிர நடவடிக்கைகள், தேவைப்பட்டன என நியாயப்படுத்துகிறார்கள். அதற்காக அங்கத்துவ நாடுகளை அவர்களுக்கு அனுசரணையானவர்கள் மூலம் ஆதரவுக்கு வசியப்படுத்துவதும் பெயர்போன மனித உரிமை வக்கீல்களை ஆலோசனைக்கு அமர்த்துவதிலும் ஈடுபாடுகிறார்கள். எங்களிடம் அப்படி செய்யக்கூடிய கஜ, துரோப வசதிகள் இல்லை. இருப்பவர்களும் ஒரு குழுமமாக காரியங்கள் ஆற்றாமல், தங்கள் தங்கள் தனிப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் முன்னேற்றம் காண விழைகிறார்கள் என்றாலும் இடைப்பட்ட அப்பாவி மக்களுக்கு நடந்தது பரவலான மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற ஆழமான உணர்வு சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளுக்கும் உண்டு. தமிழ் மக்கள் பக்கம் இருக்கும் நியாயமும் தர்மமும் இதுதான். அது நிலைக்கும்.

அதற்கு எங்கள் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடல்ல, ஆண்டாண்டு காலம், இவை பற்றி ஐ.நாவுக்கு தெளிவுபடுத்தி கொண்டிருக்கும் பாரிய அரசு சார்பற்ற (NGO) நிறுவனங்களால், பொறுப்பு கூறலுக்கு வழி வகுக்கப்படும்.

மேலைத்தேய நாடுகள் பல, ஸ்ரீலங்காவை தமது சுருக்குப்பிடிக்குள் வைத்திருக்க இந்த மனித உரிமை பேரவையின் நடவடிக்கைகள் தேவை என்று கருதுகின்றன. எங்களது தர்மத்தின் தூண்களாக இவை அமையும்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் அணுகுமுறையோடு இணைந்து, ஒரு பலமான தீர்மானத்தை கோருவதாக கடிததொனி இருந்திருக்க வேண்டும்.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

சுமந்திரன் எம்.பி. இன்று சபையில் காட்டம்:

# ரஞ்சனுக்கு அநீதி இழைக்கப்பட நாடாளுமன்றின் தவறே காரணம்

*உரிய சட்டம் இல்லாததால் நீதிமன்று தீர்ப்பளிப்பதில் காட்டுக் கழுதைக்குச் சுதந்திரம் கிடைத்த நிலைமை*



**கொழும்பு,ஜனவரி 19**
**நேர்மையானதொரு நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சன் ராமநாயக்காவுக்கு அசாதாரணமுறையில் அநீதி இழைக்கப் பட வழி வகுத்தது நாடாளுமன்றத்தின் தவறு. நாடாளுமன்றம் உரிய சட்டத்தை உரிய முறையில், உரிய நேரத்தில் யாக்கத் தவறியமையாலேயே இந் நிலைமை ஏற்பட்டது என்பதை நாடாளுமன்றத்தில் இன்று சுட்டிக் காட்டினார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன்.**

ரஞ்சன் ராமநாயக்க அவர்களின் நீதிமன்ற அவமதிப்பு தீர்ப்பு தொடர்பான இன்றைய நாடாளுமன்ற விவாதத்தில் தமது கருத்தைத் தெரிவித்த சுமந்திரன் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ரஞ்சன் ராமநாயக்கவின் அந்த வழக்கில் அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நானே. நேர்மையானதொரு அரசியல்வாதியின் சார்பில் நான் அவ்வழக்கை முன்னெடுத்தமையில் பெருமையடைகிறேன்.

துரதிஷ்டவசமாக அவர் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு நான்கு வருடக் கடூழியச் தண்டனை விதிக்கப்பட்டமை அசாதாரணமானதும் பாரதூரமான தொரு நிகழ்வுமாகும்.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக சட்டங்கள் இயற்றப்படாத காரணத்தினால் நாடாளுமன்றம் இதற்குபொறுப்புகூறவேண்டியஅவசியமுள்ளது.

நீண்ட காலமாக இவ்வாறான நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட வேண்டிய தேவையிருந்தும், பொதுநல நோக்கோடு அநேக வரைவுகள் வரையப்பட்டும் சட்டங்கள் இயற்றப்படவில்லை.

எனவே காட்டுக்கழுதைக்கு கிடைத்த சுதந்திரம் போல எவரும் எதனையும் தீர்ப்பளிக்க கூடியதொரு சூழ்நிலை காணப்படுகின்றது. இதுவே பாரதூரமான விவகாரமாகும்.

மேலும் உள்ளூர் சட்டங்கள் இயற்றப்படாத நிலையில் ஆங்கில சட்டமே நடைமுறையில் கடைபிடிக்கப்படுவதாலும், ஆங்கில சட்டத்தில் இப்படியான கூற்றுக்கள் நீதிமன்ற அவதூறாகக் கணிக்கப்படுவதில்லை என்பதனை கருத்தில் கொள்ளாது, இத்தகைய தீர்ப்பை அளித்தமை தவறானதொரு போக்கு என்பதே எனது நிலைப்பாடு.

மேலும் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்படுவதில் இருக்கும் வெற்றிடமானது நேர்மையானதொரு நாடளுமன்ற உறுப்பினருக்கு அசாதாரணமுறையில் அநீதி இழைக்கப்பட வழி வகுத்துள்ளது. - சுட்டிக்காட்டினார் அவர்.

# ரஞ்சனை சபைக்கு அழையுங்கள் இல்லையேல் போராட நாம் தயார்

## சபாநாயகரிடம் சஜித் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை சபைக்கு அழைக்கவில்லை என்றால் ஜனநாயக வழிகளிலும் போராட நாம் தயாராகவே இருக்கின்றோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குக் கிடைத்துள்ள சிறைத்தண்டனையை அடுத்து, அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குத் தற்போது சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை 6 மாதங்களுக்கு இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. நாம் இது தொடர்பாக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டுள்ளோம்.

அதாவது அரசமைப்பின் 66, 89, 91, 105 ஆவது அரசமைப்புக்கு இணங்க, அவரதுநாடாளுமன்றஉறுப்புரிமை இரத்தாகாது எனத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால், அதற்கு எதிராக அனைத்து ஜனநாயக வழிகளிலும் போராட நாம் தயாராகவே இருக்கின் றோம் என்பதையும் இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கின்றோம்.



இந்தநிலையில், அவரை ஏன் நாடாளுமன்றுக்கு இன்று அழைக்கவில்லை எனச்சபாநாயகரிடம் நான் கேட்க விரும்புகின்றேன். அவர் சிறந்த ஓர் அரசியல்வாதி. பொய், ஊழல், இனவாதம் அற்ற ஓர் அரசியல்வாதி. அவர் மக்களின் மனங்களை வென்றவர். இப்படியான ஒருவரை ஏன் இன்று நாடாளுமன்றுக்கு அழைக்கவில்லை என்பதற்குப் பதில் கோருகின்றேன் - என்றார்.

# ஜனாதிபதியை ஏன் இன்னமும் சுய தனிமைப்படுத்தவில்லை?



## நாடாளுமன்றில் எதிர்க்கட்சி கேள்விக்கணை

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமான தொடர்பைப் பேணிய ஜனாதிபதி ஏன் இன்னமும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை?

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே.

நாடாளுமன்ற அமர்வில் இன்று கலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கேள்வியை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவும் டயர் தொழிற்சாலையொன்றின் திறப்பு விழாவில் கலந்துகொண்டார்.

எனினும், இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்குக் கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்படியென்றால் ஜனாதிபதியைச் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது அவசியமில்லையா?

எமது ஆட்சிக் காலத்தில் விளையாட்டு டயர் நிறுவனம் ஒன்றை நாம் ஆரம்பித்துள்ளதாக விமர்சித்தவர்கள் தான் தற்போது அதே டயர் நிறுவனத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

எனவே, இப்போதைய அரசு எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில் எம் மீது முன்வைத்த விமர்சனங்கள் அனைத்தும் பொய்யானவையாகும். நாட்டு மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

# யாரையோ திருப்திப்படுத்தவே 'உதயன்' நாளிதழ் மீது வழக்கு

## நீதிமன்றில் எடுத்துரைப்பு

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,ஜன.19

யாரையோ திருப்திப்படுத்தி அவர்களுக்கு விசுவாசமாகச் செயற்படுவதற்காகவே யாழ்ப்பாணப் பொலிஸார் வன்மத்துடன் 'உதயன்' பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் போன்றே உள்ளது என சட்டத்தரணி வி.திருக்குமரன் இன்று நீதிமன்றத்தில் எடுத்துரைத்தார்.

2020 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் 26 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் அன்று, அவரது படத்துடன் உதயன் பத்திரிகை யில் செய்தி வெளியாகியிருந்தது. இது தொடர்பில் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸாரால் நீதிமன் றுக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஒளிப்படம் பிரசுரிக்கப் பட்டமை தொடர்பில் விசாரணை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு மார்ச் மாதம் 26ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டிருந்த போதும்

மீண்டும் டிசெம்பர் 7ஆம் திகதி நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து வழக்கை எடுக்க பொலிஸார் கோரினர்.

இந்த கோரிக்கையில் தமது வழக்கு விசாரணைக்கு வாக்கு மூலம் வழங்க உதயன் சார்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது என்று நீதிமன்றில் குறிப்பிட்டனர். இதற்கு அமைவாக நீதிமன்றால், உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் கு. டிலீப் அமுதன் ஆகியோரை மன்றில் இன்றைய தினம் முன்னிலையாகுமாறு அழைப்பு அனுப்பப் பட்டது.

மன்றில் உதயன் பத்திரிகையின் சார்பில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனின் வழிகாட்டலில், மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரனின் நெறிப்படுத்தலில், ம. டெனிசியஸ், தி.கணாதீபன், த.திவாகர், எஸ்.ரிசிகேசன், பு.அபிதன் ஆகியோர் முன்னிலையாகினர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படம் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தினரால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாக்குமூலம் வழங்குமாறு உதயன் பத்திரிகையிடம் கோரப்படவில்லை என்றும், வேறொரு செய்தி தொடர்பில் வாக்குமூலம் வழங்க வருமாறு கோரப் பட்டதற்கு உதயன் பத்திரிகையின் சார்பில் பதிலளிக்கப்பட்டது என்பதையும் சட்டத்தரணி வி.திருக்குமரன் எடுத்தியம்பினார்.

அத்துடன் ஈ.சரவணபவன், தான் மேற் கொண்ட முறைப்பாடு தொடர்பில் வாக்கு மூலம் வழங்க பொலிஸ் நிலையம் சென்ற சந்தர்ப்பத்தில் வேண்டுமென்றே நீண்ட நேரம் அவரைக் காக்க வைத்துவிட்டு, ஒளிப்படம் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பில் கேட்கப் பட்டது. அதற்கும் அவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை. செய் திகள் தொடர்பில் ஆசிரியர்பீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கூறினார் என்பதையும் மன்றில் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

பொலிஸார் தமக்கு வேண்டிய யாரையோ திருப்திப்படுத்த தமது விசு வாசத்தைக் காண்பிக்கும் வகையில் வன்மத்துடன், மன்றைப் பிழையாக வழி நடத்தியுள்ளனர் என்று சட்டத்தரணி எடுத்துரைத்தார். அத்துடன் தமது கட்சிக்காரர்கள் வாக்குமூலம் வழங்கத் தயாராக இருக்கிறார்கள் எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து நாளைய தினம் காலை 9 மணியிலிருந்து 12 மணிக்குள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்புபிரிவில்வாக்குமூலத்தை வழங்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் அ.பீற்றர்போல் குறிப்பிட்டார்.

மேலும்,தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்துடன் சிங்கள, ஆங்கில மற்றும் வேறு தமிழ் ஊடகங்கள் செய்திகளைப் பிரசுரித்துள்ள நிலையில், உதயன் பத்திரிகை மீது வேண்டுமென்று, யாருக்கோ தமது விசுவாசத்தை காட்டுவதற்கு பொலிஸார் இவ்வாறான வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர் என்று சட்டத்தரணி வி.திருக்குமரன் மன்றில் எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இந்த வழக்கு மார்ச் மாதம் 19ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டது.

# புதிய யாழ். தளபதி பதவியேற்கிறார்



(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாணம் மாவட்டக் கட்டளைத் தளபதியாக இன்று முதல் மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா பதவி ஏற்றுள்ளார்.

இதுவரை நாளும் யாழ் . மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சேனரத் பண்டார பதவி உயர்வுடன் கொழும்பிற்கு இடமாற்றலாகிச் சென்றதமையால் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி பதவி வெற்றிடம் ஏற்பட்டது.

இந்த வெற்றிடத்திற்கே நேற்று வரை வன்னி கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.




# முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்க நிதி உதவி வழங்கி உதவுமாறு கோரிக்கை!

## விடுத்தது பல்கலை மாணவர் ஒன்றியம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீண்டும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைப்பதற்கு நிதி உதவி வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில், மாணவர் ஒன்றியம் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

இதன்போது பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்ட நிலையில், மாணவர்களினதும் தாயகத்தின் புலம்பெயர் தேசங்களிலுள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் ஆதரவுகளாலும் போராட்டங்களாலும் மீண்டும் தூபி அமைப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆகையால் இந்தத் திட்டத்துக்கு நிதி தேவைப்படுவதால், அதற்கான நிதி உதவியை வழங்குமாறு அனைவரிடமும் மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிதியுதவியை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வைப்பிலிடுமாறும் வங்கி கணக்கு இலக்கத்தையும் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதற்கு மாணவர் ஒன்றியத்திடம் மாத்திரமே இந்த நிதி உதவியை வழங்குமாறும் வேறு இடங்களில் இதற்கான நிதி சேகரிக்கப்படவில்லை என்பதையும் ஏதேனும் சேகரிப்புகள் இடம்பெற்றால் அதற்கு மாணவர் ஒன்றியம் பொறுப்பில்லை என்பதையும் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## மீண்டும் இலவு காத்த கிளிகள்...

ஆனால் கடிதமோ, இலங்கையை பொறுப்புக்கூற கேட்பதில் பிரயோசனமில்லை. ஆகவே அடுத்த கட்டத்திற்கு போகவேண்டும் அதற்கான ஒரு முடிவான (Final Resolution) தீர்மானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கோரப்படுகிறது.

அந்த வாசகங்களால், மனித உரிமை பேரவை நாடுகளே, ஸ்ரீலங்கா தனது ஒத்துழைப்பை வாபஸ் பெற்று விட்டது. வரக்கூடிய எந்த ஒரு தீர்மானத்துக்கும் இணை அனுசரணை தரப்போவதில்லை, தமிழ் தரப்புகளும் மனித உரிமை பேரவையால் ஒன்றும் சாதிக்க முடியாது, ஆகவே இளைப்பாறுங்கள், எங்களை ஐ.நாவுக்கு பழைய படி பாரப்படுத்தி விடுங்கள் என்று கேட்கிறார்கள் என்ற வசதியான அபிப்பிராயத்தை எடுத்து பெரும்பான்மையில் விலகி விடலாம்.

அதன்பின் ஐ.நா. எடுக்கக் கூடிய நடவடிக்கை எதுவாக இருக்கும் என்று அரசியல் தலைவர்கள் சொல்லவில்லை. ஒரு திடமான ஆணித்தரமான திட்டப் பிரகாரம் இது நடைபெறுகிறதோ என்பதும் தெளிவில்லை.

ஒரு காலம், ஐ.நாவில் ஓரிரு நிமிடங்கள் வைகுந்தவாசன், ஒழுங்கு முறைகளை மீறி பேசியமையை தவிர, அங்கு எங்களுக்காக ஒலித்த குரல்கள் சிலவே. நியூயோர்க்கில் அந்த அவையில் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக அறிவித்தமை பற்றிய பல வாதப் பிரதிவாதங்களே நடந்தன. மீண்டும் இந்த வருடமும் அவர்களின் பயங்கரவாதப் பட்டியலில் புலிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

அந்த அமைப்பில் அதாவது நியூயோர்க் பனிமலையில் நாங்கள் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்தி கொள்ளவில்லை. அங்கிருக்கும் தமிழ் அமைப்புக்கள் அந்த நாட்டின் உறுப்பினர்களுக்கு செய்யும் பிரச்சாரங்களால் காரியங்கள் நடக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். யதார்த்தம் அது வல்ல.

எமது நிலை, சர்வதேச ரீதியில் கம்போடியா, ருவண்டா, மியன்மார் (பர்மா) பழைய செக்கலோவாக்கியாவின் உறுப்பு நாடுகளில் நடந்தவை போன்றதல்ல. ஆனால் யுத்தக் கால கட்டத்துக்கு வெளியே நடந்த சம்பவங்கள், சிங்கள ஏகாதிபத்தியத்தின் மனப்போக்கு என்பவை எல்லாவற்றையும் தொடர்ச்சியாக கோவைப்படுத்தி பார்த்தால் இனப்படுகொலை என்றில்லாவிட்டாலும் இனச் சுத்திகரிப்பு என்ற அடைமொழிக்குள் ஆவது அடங்கும்.

அப்படியான ஒரு பொறிமுறையை மனித உரிமை பேரவையின் கருத்தாடல்கள் நடைபெறும். அதே வேளைகளில் செயலாளர் நாயகம் ஏற்படுத்தும் உந்துவிப்பை செய்ய, இதனை கேட்கும் தலைவர்கள் அதற்கான தகுதியான ஆவணங்களை சேகரித்து கோவைப்படுத்தி அந்த பதங்களை நிரூபிக்க வேண்டும்.

அதற்கு காலம் காலமாக வெளியிட்ட அரசியல் அறிக்கைகளோ, வட்டுக்கோட்டை தீர்மானமோ, மாவீரர் தின பேச்சுக்களோ போதா. இதில் தான் அவர்களது கடிதத்தில், ஐ.நா. சபையின் உபபிரிவாக சிரியா சம்பந்தமாக உருவாக்கப்பட்ட சாட்சியங்களை சேகரிக்கின்ற பொறிமுறை போன்றதொன்றை கடுமையான 12 மாத அவகாச நிபந்தனைகளோடு ஏற்படுத்த வேண்டும் என்று கோருவது விந்தையாக உள்ளது.

இந்த சாட்சியச் சேகரிப்பு எதற்காக? போர்க் காலத்தில் நடந்த அவலங்களுக்கா? இவை ஐ.நாவினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் மூலமும், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் போர்க் காலத்தில் இருந்து அவதானித்தவையிலும் ஸ்ரீலங்கா ஏற்படுத்திய ஆணைக்குழுவின் மூலமும் நிறைய உண்டு. அது தவிர நானறிந்த வரையில், போரின் பின் அகதிகளாக வெளியேறி அயல் நாடுகளுக்கு அகதிகளாக போனவர்களின் வாக்குமூலங்களில் தாராளமாக உண்டு. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளில் அமைப்புக்களின் உதவிகளோடு, அனுமதிக்கபடக் கூடிய சத்திய பிரமாணங்கள் இவர்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளன.

இவை எல்லாம் இயலாத்தனத்தால் அன்றி, தம்மிடையே இவைக்கான கட்டமைப்புகளை அமைக்காததனால் யாரோ அலுவலை பார்த்து ஏதேனும் செய்து தந்தால் அது சுகம் என்ற எண்ணப்பாங்கு தான்.

இனப்படுகொலை அன்றில் இனச் சுத்திகரிப்பு எனின் அதற்கான சாட்சியங்களை கோவைப்படுத்த இவற்றை கோரும். தலைவர்கள் அர்த்த புஷ்டியுடன் காரியமாற்றவேண்டும். அவை உலகெலாம் பரந்து கிடக்கின்றன. அதற்கான ஆணையத்தை செயல்படுத்த முனையவேண்டும்.

மாவை சேனாதிராஜா அப்படியான ஒன்றை செய்யப் போகிறோம் என்றார்.

காகம் கரைவதை தமிழ் மக்கள் கேட்பதா? அன்றில் எப்பவுமே இலவு காத்த கிளிகள் போலாவதா?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# கடனைச் செலுத்த தேசிய வளங்களை விற்பனை செய்கின்றது அரசாங்கம்!

## சாடுகிறார் ரில்வின் சில்வா



நாட்டின் கடனைச் செலுத்துவதற்காக அரசாங்கம் தேசிய வளங்களை விற்பனை செய்து வருகிறது என தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஆண்டு மட்டும் 5.8 பில்லியன் கடனை திருப்ப செலுத்த வேண்டியுள்ளது என்றும் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தக் கடனைச் செலுத்துவதற்காக எண்ணெய் குதங்கள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் உள்ளிட்ட பெறுமதிமிக்க வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்றும் குற்றம் சாட்டினார்.

பொது ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த துறைமுகங்கள் ஓர் அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அப்படி என்றால் அரசாங்கம் ஏன் துறைமுகத்தை விற்க நடவடிக்கை எடுக்கின்றது என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

## சிறையிருந்த 40...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவை சென்றடைந்தனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட சமயமும் இலங்கைக்குள் சட்டவிரோதமான கடத்தலில் ஈடுபட்டபோதும் கைது செய்யப்பட்ட குற்றச் சாட்டின் கீழ் 52 இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு தடுத்து வைத்திருந்த 52 பேரிலேயே இந்த 40 பேரும் விடுவிக்கப்பட்டு கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விமானம் மூலம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு இந்தியா சென்றடைந்த 40 மீனவர்களில் 26 பேர் யாழ்ப்பாணத்தில் இருந்தும் 7 பேர் கிளிநொச்சியில் இருந்தும், 7 பேர் புத்தளத்தில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

இதேநேரம் எஞ்சிய 12 இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நேற்றும் 660...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

7 ஆயிரத்து 543 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அரசியல் கைதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோட்டாபய ராஜபக்ஷவிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்குறித்த விடயம் தொடர்பாக மதத் தலைவர்களின் கையெழுத்து அடங்கிய மகஜர் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த மாதம் யாழ். மாவட்டத்தில் உள்ள சர்வ மதத் தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக வடக்கில் உள்ள சர்வ மதத் தலைவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் குறித்த மகஜரில் நேற்றுமுன்தினம் சர்வமதத் தலைவர்களிடம் கையெழுத்துப் பெறப்பட்டு நேற்று யாழ்.ஸ்ரீநாக விகாரை விகாராதிபதி மீஹாகஜதுரே ஸ்ரீ விமலதேரர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மதத்தலைவர்களின் கையெழுத்து அடங்கிய மகஜரை 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் இணைப்பாளர் மு.கோமகன் தேரரிடம் வழங்கிவைத்தார்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

# கொரோனாவைக் கட்டுப்படுத்தாது விட்டால் ஜனவரிக்குப் பின்னர் நாடு மோசமடையும்!

## அரச மருத்துவர் சங்கம் எச்சரிக்கை



கொரோனாவைரஸைக்கட்டுப்படுத்துவதற்கு ஏனைய நாடுகள் பின்பற்றிய தந்திரோபாய அணுகுமுறையை இலங்கை பின்பற்றாவிட்டால் ஜனவரிக்கு பின்னர் என்ன நடக்கும் என்பது தெரியாது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

கொரோனா வைரஸிற்கு எதிரான தந்திரோபாய அணுகுமுறை அவசியம் என்றும் அது தங்கள் நாட்டுக்குப் பொருந்தும் விதத்தில் பயன்படுத்தவேண்டும் எனவும் அந்த சங்கத்தின் வைத்தியர் ஹரித் அலுத்கே தெரிவித்துள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரித்து நோயாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும், நகரங்களுக்கு இடையே போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் மக்கள் மத்தியில் வைரஸ் அபாயத்தைக் குறைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொவிட் 19 நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும் மேல் மாகாணத்திலிருந்து வைரஸ் ஏனைய பகுதிகளுக்கு கொண்டு செல்லப் படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோயாளிகள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றமையால், வைத்தியசாலைகளில் இடவசதியில்லாத நிலை உருவாகி வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகள் தங்களால் இயலக்கூடிய அளவைக் கடந்துவிட்டால் நாட்டின் சுகாதார அமைப்பு முறை முற்றாக வீழ்ச்சி காணலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதன் காரணமாக தொற்றுநோய் பிரிவும் சுகாதார அமைச்சும் ஜனாதிபதியை எச்சரிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கைக்கு இந்தியா முக்கியத்துவம்!

அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற தனது கொள்கைக்கு தொடர்ந்தும் முக்கியத்துவம் வழங்கப்படும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதிக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளார்.

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை வழங்கும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளமைக்காகவும் நட்புறவு அயல்நாடுகள் குறித்த தாராள மனப்பான்மைக்காகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்திய ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இதற்கு தனது ருவிட்டர் செய்தியில் பதிலளித்துள்ள இந்தியப் பிரதமர் மோடி, 'நன்றி கோட்டாபய ராஜபக்ஷ. நோய்பரவலிற்கு எதிராக கூட்டாக போராடும் அதேவேளை, நாங்கள் தொடர்ந்தும் அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற எங்கள் கொள்கைக்கு முக்கியத்துவம் வழங்குவோம்' எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய அரசாங்கம் அயல்நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் மில்லியன் டோஸ்களிற்கு அதிகமான கொரோனா வைரஸ் மருந்தை வழங்குவதற்கான வழிவகைகள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது என இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் பெண் தற்கொலை பொலிஸார் தீவிர விசாரணைகளில்!

வவுனியா - கூமாங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் தற்கொலை செய்துகொண்ட இளம் குடும்ப பெண்ணின் சடலம், பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 26 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.

மேலும் சம்பவ தினத்தன்று வீட்டில் எவரும் இருக்கவில்லை எனவும் இதன்போதே அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் கணவன் மனைவிக்கு இடையில் தகராறு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

# இரு புதிய உறுப்பினர்கள் கோப் குழுவுக்கு நியமனம்!



அரசாங்க நிதி பற்றிய குழுவில் இரு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன நேற்று காலை கூடிய நாடாளுமன்ற அமர்வின்போது அறிவித்தார்.

அதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களான மனு நாணயக்கார மற்றும் குமார வெல்கம ஆகியோர் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு (கோப்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோப் குழு உறுப்பினர்களான ஹேஷா விதானகே மற்றும் சமிந்த விஜேசிறி ஆகியோரின் இராஜினாமாவினால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1992.07.31 | பிறந்த திகதி - 1991.12.12 |
| மதம் - இந்து K | மதம் - இந்து K |
| நட்சத்திரம் - மகம் | நட்சத்திரம் - அவிட்டம் 4 |
| செவ் - 7 இல் | சூ/செவ் - 9 இல் |
| பாவம் - 21 1/4 | பாவம் - 04 |
| கல்வி - MBBS | கல்வி - MBBS |
| தொழில் - Doctor | தொழில் - Doctor |
| எதிர்பார்ப்பு - Doctor or Engineeer | எதிர்பார்ப்பு - Doctor or Engineeer |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி, பருத்தித்துறை பிரதான வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

EXPRESS Courier Services
அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம், சங்கானை, கல்வியங்காடு, ஆவரங்கால், நெல்லியடி
சங்கத்தானை, பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
கனகராயன்குளம், மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

4SIGHT OPTICALS
08B 1ம் மாடி கார்கில்ஸ் சதுக்கம் யாழ்ப்பாணம்.
அனைத்து விதமான மூக்குக் கண்ணாடிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
021 222 3038 / 077 700 2411

CNR world wide Express
International Courier & Cargo Service.
Courier & Cargo
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தர வாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும்வசதி.
அனுப்பும் பொதிகளை இணைய தளத்தில் கண்காணிக்கும் வசதி.
இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.01.2021 இல் வெளியிடப்பெற்றது.